RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 13 ஒக்டோபர் 2023 இதழ்:- 22

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## எம் தேசத்தின் இவர்களுக்கான “ஊட்டும் கரங்கள்” 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை கலந்து கொள்ளுங்கள்





எம் தேசத்தின் நாளைய சந்ததியினரான இக் குழந்தைகளின் உயிர் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு நடைபெறும். ஊட்டும் கரங்கள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். பொருளாதார நெருக்கடி, மழை கால ஆரம்பம், பிள்ளைகளின் கம்பளிப் போர்வை என பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளை கடந்த 11ஆண்டுகளாக இவர்களுக்கான உணவுத் தேவையையும் கல்வித்தேவையும் பூர்த்தி செய்து வரும் கனடியத் தமிழ்ச் சொந்தங்கள் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். விபரங்கள் 5ம்.12ம், 13ம் பக்கம் பார்க்க) தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## காலிஸ்தானியர்களை ஈழத்தமிழர்கள் ஆதரிக்கலாமா?



இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான இராஜ தந்திர நெருக்கடி தொடர்கின்றது. கடந்த யூன் மாதம், காலிஸ்தான் பிரிவினையை வலியுறுத்தி செயற்பட்டு வரும் சீக்கிய தலைவரான ஹர்தீப் சிங்க நிஜார் என்பவர், கனடாவில் வைத்து கொல்லப்பட்டிருந்தார். இதற்கு பின்னால் இந்திய முகவர் செயற்பட்டிருப்பதற்கான நம்பகமான குற்றச் சாட்டுக்கள் இருப்பதாக, கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, கனடிய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (17ம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய - உக்ரேன் போர் - இஸ்ரேல் - ஹமாஸ்

### யுத்தம் தமிழர் விவகாரம் மேலும் பின்னுக்குச் செல்லும் அபாயம்

யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்களில் தமிழர் பிரச்னைக்கான தீர்வில் முன்னேற்றகரமான விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்தக் காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வருடங்கள் தோறும் சென்று முறையிட்டதிலிருந்து ஆணையாளரின் அறிக்கைகளால் (4ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd

**Oshawa** **$279,000**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Burnhamthorpe & Confederation

**Mississauga** **$619,990**
Bedrooms: 1+1 Washrooms: 1
Indoor pool, gym, party/games rool

### Warden Ave / Enterprise Blvd

**Markham** **$749,000**
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

### Dundas/Hurontario St

**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Mississauga Rd & Eglinton Ave


**Mississauga** **$1,193,000**
Bedrooms: 3 Washrooms: 4
Closer to 403, 401, 407

### Lawrence & Morningside

**Scarborough** **$629,900**
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### Green Rd & Brookhill Blvd

**Clarington** **$999,990**
Bedrooms: 3 Washrooms: 3
Spent $100,000 on Recently Reno.


### Markham Rd & Denison

**Markham** **$629,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.


### Simcoe St / Buckingham Ave

**Oshawa** **$1,349,998**
Bedrooms: 5 Washrooms: 4
Victorian Style home in Oshawa

### Main St & Danforth Ave

**Toronto** **$1,400,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Newly Renovated Spacious Home

### Woodbine Ave & Mt Albert Rd

**East Gwillimbury** **$1,500,000**
Bedrooms: 3 Washrooms: 2
Approx. 90 Ft Of Frontage

### 9th Line/14th Ave

**Markham** **$1,759,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

### Meadowvale / 401


**Scarborough** **$1,999,786**
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Fletcherscreek Blvd/Bovaird Dr

**Brampton** **$3,500**
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

### Brock Rd/William Jackson Dr


**Pickering** **$2,750**
Bedrooms: 2 Washrooms: 3
Open concept main level

### Lawrence/Scar. Golf Club


**Scarborough** **$3,500**
Bedrooms: 3+1 Washrooms: 2
Great neighbourhood

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca**
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மீண்டும் புலிகளென இந்தியாவின் புலனாய்வுத் தகவல் தெரிவிப்பு - சரத்



தோட்டாக்களினால் பெற்றுக் கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, 13 ஆவது திருத்தத்தின் ஊடாக பெற் றுக் கொள்வதே சிலரின் இலக்காகும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். ஜனாதி பதி ஊடகப்பிரிவில் 12 ஒக்டோபர் 2023 இடம் பெற்ற ஊடக சந்திப்பி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

எல்.டி.டி.ஈ. அமைப்பை நாம் பெரும் பாலும் அழித்துள்ளோம். ஆனால், நாம் புலி அமைப்பின் வாலை மட்டும் தான் அழித்துள்ளோம். அதன் தலை உள்ளிட்ட ஏனைய பகுதிகள் ஐரோப்பிய நாடுகளில் இரு ந்து இன்னமும் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. தமிழ் பிரிவினைவாத புலம் பெயர் அமை ப்புக்கள், தங்களின் கனவை இன்ன மும் விடவில்லை.

தோட்டாக்களினால் பெற்றுக் கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, 13 இன் ஊடாக பெற்றுக் கொள்வதே இவர்களின் இலக்காகும். இதனால் தான், நாம் போர்க்குற்றங்களில் ஈடு பட்டதாக ஜெனிவாவில் இவர்கள் குற்றஞ்ச ாட்டி வருகிறார்கள். அத்தோடு, வடக்கு கிழக்கிலுள்ள பௌத்த புராதன சின்னங்களை அழிக் கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

யுத்தத்திற்கு பின்னர் 12 ஆயிரத்து 422 புலி உறுப்பினர்களை நாம் புனர் வாழ்வளித்து, சமூக மயமாக்கியுள் ளோம். பயங்கரவாதத்தை நாம் கட்ட மைப்பு ரீதியாக இல்லாதொழித்தாலும், அவர்களின் ஈழக் கனவு இன்னமும் இருப்பதனால், எமக்கு இன்னமும் அச்சுறுத்தலான சூழல் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்த நிலையில் தான் மீண்டும், எல்.டி.டி.ஈ. அமைப்பு தலைத்தூக்கி வருவதாக இந்தியாவிலிருந்து எம க்கு புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது. இது தொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர், ஆராய்ந்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லையாம்
## வெளிநாடு சென்றது மனைவிக்கே தெரியாது என சி.ஐ.டி அறிக்கை



முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் அல்லது வேறு எந்த வகையிலும் அச்சுறுத்தல் விடுக்கப் படவில்லையெனவும் .அவரது திடீர் வெளிநாடுப் பயணமானது முன்கூட் டியே திட்டமிடப்பட்டது எனவும்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தின் (CID) டிஜிட்டல் தடயவியல் பிரிவு அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

செப்டம்பர் 25ஆம் திகதி இந்தியா செல்வதற்கு நீதிபதி விடுப்பு கோரி விண்ணப்பித்த போது அதற்கு ஒப்பு தல் அளிக்கப்பட்டு செப்டம்பர் 24ஆம் திகதி அவர் திடீரென வேறு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று விட் டார் என்று அந்த அறிக்கை கூறு கிறது.

குறித்த சம்பவத்தின் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட ஏதேனும் குழு க்களின் செல்வாக்கு இருக்கிறதா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உயிரச்சுறுத்தல் காரணமாக நீதிபதி சரவணராஜா பதவியை இராஜினாமா செய்தது தொடர்பில் முழுமையான விசாரணை நடாத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தி யுள்ளார்.

நீதிபதி சரவணராஜா தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பில் நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் எதையும் பதிவு செய்யவில்லை. மேலும் செப்டெம்பர் 23 ஆம் திகதி தனது இராஜினாமா கடிதத்தை நீதித்துறை சேவைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைத்ததுடன் செப்டெம்பர் 24ஆம் திகதி அவர் வெளிநாட்டிற்கு சென்றார். அத்து டன் குறித்த நீதிபதி பிரதிவாதியாக பதிவு செய்யப்பட்ட வழக்கு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்தது.

நீதிபதி சரவணராஜாவின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதபதி டி. பிரதீபன், முல்லைத்தீவு சிரேஷ்ட அத்தியட்சகர் டி.யூ .பீ. அமரதுங்க, பொலிஸ் தலைமையக பதில் ஆய்வா ளர் W.G.H.N.K. திலகரட்ன, நீதிபதி யின் தனிப்பட்ட பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி கான்ஸ்டபள் கே.எஸ். பிரே மன், தனிப்பட்ட பாதுகாப்பு கான்ஸ் டபள் கே. சிவகாந்தன், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தின் பொலிஸ் கான்ஸ்டபள் எம். முதிசன், முல்லைத் தீவு பொலிஸ் கொன்ஸ்டபள் ஆகி யோர் சமரகோன் மற்றும் சந்தருவன், முல்லைத்தீவு நீதிமன்ற பதிவாளர் பீ. சரவணராஜா, நீதிபதியின் அலுவலக எழுத்தர் (Clerk) பீ. சுசிகன், பிஸ்கல் எஸ். சிவக்குமார் மற்றும் முல்லைத் தீவு நீதிமன்ற உத்தியோகத்தர் ஜே. லின்டன் ராஜா ஆகியோரிடம் சம்ப வம் தொடர்பில் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

நீதிபதி செப்டம்பர் 24ஆம் திகதி டுபாய்க்கு சென்றது தெரியவந்துள் ளது. அதற்காக குருநாகல் விற்ப னைப் பிரதிநிதி ஒருவரிடமிருந்து எயார் அரேபியா விமானப் பயணச் சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டு ள்ளதுடன் அது தொடர்பான அனை த்து நடவடிக்கைகளும் அமெரிக்க தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்ட தொலைபேசி எண் செயல்படவில்லை என்றால் மீண்டும் அழைக்க பயணச்சீட்டு விற்பனை முகவருக்கு கென்ய தொலைபேசி இலக்கம் ஒன்றும் வழங்கப்பட்டுள் ளது.

கல்முனைப் பகுதியில் இருந்து விமானப் பயணச்சீட்டுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஷார்ஜா, நைரோபி, டெல்லி வழியாக ஒக்டோ பர் 12ம் திகதி இலங்கை திரும்பு வதற்கு பயணச்சீட்டு பெறப்பட்டது. விமான நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, ஷார் ஜாவை (5ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ரஷ்ய - உக்ரேன் போர் - இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் தமிழர் விவகாரம் மேலும் பின்னுக்குச் செல்லும் அபாயம்

யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்களில் தமிழர் பிரச்னைக்கான தீர்வில் முன்னேற்றகரமான விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை.

இந்தக் காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வருடங்கள் தோறும் சென்று முறையிட்டதிலிருந்து ஆணையாளரின் அறிக்கைகளால் பயன் கிட்டுமென்று நம்பியதிலிருந்து இராஜ தந்திரிகளுக்கு விளக்கமளித்ததிலிருந்து தமிழ் மக்களை நோக்கி நன்மைகள் வருமென்று எதிர்பார்க்கப்பட்டன.

ஆனால் காலம் விரயமானதேயன்றி ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை. ஆனால் சர்வதேச அரங்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் எவ்வாறு தமிழர் பிரச்னையை இரண்டாம் நிலைக்கு தள்ளிவருகின்றது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ரஷ்ய உக்ரைன் யுத்தம் சர்வதேச அரசியலின் முகத்தை திடீரென்று மாற்றியது. உலகின் முழுக்கவனமும் உக்ரைன் பக்கம் திரும்பியது.

அந்த யுத்தத்தை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவதென்னும் கேள்விக்கான பதிலை காண முடியாத நிலையில், தற்போது, ஹமாஸ் திடீரென்று இஸ்ரேலின் காசா பகுதியின் மீது தாக்குதலை மேற்கொண்டு, யூதர்கள் பலரை கொன்றிருக்கின்றது.

இஸ்ரேல் யுத்தத்தை பிரகடனம் செய்திருக்கின்றது. இந்த யுத்தம் நீண்டதாகவும் சிக்கலானாதாகவும் இருக்குமென்று இஸ்ரேல் அறிவித்திருக்கின்றது.

ஐரோப்பா ஒரு யுத்தத்தை எதிர்கொண்டு வருகின்ற போது — மத்திய கிழக்கில் பிறிதொரு யுத்தமுனை திறந்திருக்கின்றது.

இந்த யுத்தம் எவ்வாறு முடிவுறுமென்று தற்போது எவராலும் எதிர்வு கூற முடியாது — ஏனெனில், இது ஈரானை நோக்கிய பெரும் யுத்தமாகவும் விரிவு கொள்ளக்கூடும்.

இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய விடயம், இவ்வாறான பெரும் பிரச்சனைகளோடு ஒப்பிட்டால் இலங்கை விவகாரம் ஒரு விடயமேயல்ல. ஒரு கோட்டை சிறியதாக்க வேண்டுமென்றால், அதன் அருகில் அதனை விடவும் பிறிதொரு பெரிய கோட்டை கீறுவதன் மூலம் முன்னைய கோட்டின் மீதான கவனம் இல்லாமல் போய்விடும் என்பது போல் தமிழர் விவகாரம் மேலும் மேலும் சிறியதாகி காணாமல் போகக்கூடிய சூழலே மேலோங்கியிருக்கின்றது.

இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டே ஈழநாடு தொடர்ந்தும் யதார்த்தபூர்வமான அரசியல் அணுகுமுறைகளை முதன்மைப்படுத்தி வந்திருக்கின்றது. இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, அதிலிருந்து முன்னோக்கி நகர முடியுமென்பதையே நாம் அறிவுறுத்தி வந்திருக்கின்றோம்.

இந்த அடிப்படையில் தான் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை நோக்கி திரும்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அதுவே, இன்றைய அரசியல் யதார்த்தமாகவும் இருக்கின்றது.

அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்குக் கூட, அனைத்து தரப்புகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியிருக்கின்றது. சர்வதேசத்தை நம்பிக் கொண்டிருக்கும் தமிழர் அரசியலில் சர்வதேச அரசியல் அறிவோ மிகவும் பலவீனமாக இருக்கின்றது. கடந்த பதினான்கு வருட காலம் முழுவதும் சர்வதேசத்தை நோக்கியதாகவே, அனைத்து எதிர்பார்ப்புகளும் நிலை கொண்டிருந்தன. ஆனால், சர்வதேசத்தை உற்று நோக்கி, அதற்கேற்ப, விடயங்களை கற்றுக் கொண்டு செயற்படும் ஆற்றலை எந்தவொரு தமிழ் தலைமையும் வெளிக்காட்டவில்லை.

அவர்களால் இயலவில்லை என்பது தான் உண்மை. சர்வதேசத்தை தெளிவாக உற்று நோக்கக் கூடியவர்கள் வந்து சேரக் கூடிய இடம் தற்போது இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்வது தான்.

## விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவரைக் கொலைக் குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்தார் நீதிபதிஇளஞ்செழியன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவு பிரிவை சேர்ந்தவர் எனக் கூறப்படும் சந்தேகநபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட கொலை குற்றச்சாட்டு வழக்கில், கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் வழக்கில் இருந்து அவரை விடுதலை செய்து மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் செட்டிக்குளம் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் எதிரியை கைது செய்ததாக, அவரை கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் சாட்சியம் அளித்திருந்தார். எனினும் கொலையுடன் நேரடியாக தொடர்புபடுத்தி எந்தவொரு சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என பொலிஸ் உத்தியோகத்தர் மேலும் சாட்சியம் அளித்துள்ளார்.

இதேவேளை குறித்த உயிரிழப்பு துப்பாக்கிப் பிரயோத்தால் ஏற்படுத்தப்பட்ட மரணம் என வைத்திய கலாநிதி சாட்சியம் அளித்தார் என்ற போதும் தான் இக்கொலையை செய்யவில்லை என எதிரி, நீதிபதி முன்னிலையில் சாட்சியம் அளித்துள்ளார். இதனையடுத்து கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என தீர்ப்பளித்த நீதிபதி இளஞ்செழியன் எதிரியை கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்தார்.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா மீதான உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான நீதிவிசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகுவதை சுட்டிக் காட்டியும் கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளன. குறித்த கலந்துரையாடலில் மாவைசேனாதிராஜா, விக்னேஸ்வரன்,சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் சிறீகாந்தா சிவாஜிலிங்கம், வேந்தன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் இந்தியா?

## இஸ்ரேல் பிரதமருடன் நேரடியாகப் பேசிய இந்தியப் பிரதமர்



ஹமாஸ் இயக்கத்தினருக்கு எதிராக இஸ்ரேல் நடத்தி வரும் போர் குறித்த சமீபத்திய தகவல்களை, அந் நாட்டு பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு பிரதமர் நரேந் திர மோடியிடம் விளக்கினார். தங்கள் நாட்டுக்குள் திடீர் தாக்குதலில் ஈடுபட்ட ஹமாஸ் இயக்கத்தின ரைக் குறி வைத்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் இயக்கத்தினரின் 1,290 இடங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி இருப்ப தாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, 'போரை நாங்கள் தொடங்கவில்லை. ஆனால், நாங்கள் வெற்றிகரமாக அதனை முடித்து வைப்போம். இஸ்ரேல் மீது நடத் தப்பட்ட தாக்குதலுக்கு மறக்க முடியாத பதிலடியை நாங்கள் கொடுப்போம் என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடியை தொலை பேசியில் தொடர்பு கொண்ட இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, ஹமாஸ் அமைப்புக்கு எதிரான போர் குறித்த சமீபத்திய தகவல்களை பகிர்ந்து கொண்டார். இதனை தனது எக்ஸ் பக்கத் தில் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, தற்போதைய நிலை குறித்து தெரிவித்த இஸ்ரேல் பிரதமர் நேதன் யாகுவுக்கு நன்றி. கடினமான இந்த தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்திய மக்கள் தங்கள் உறுதியான ஆதரவை அளித்து வருகிறார்கள். பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் இந்தியா உறுதியாக கண்டிக்கிறது' என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, போர் தொடங்கிய கடந்த சனிக்கிழமை வெளியிட்ட பதிவில், இஸ்ரேல் மீதான பயங்கரவாத தாக்குதல் குறித்த செய்தி மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்காகவும், அவர்களின் குடும்பங்களு க்காகவும் பிரார்த்திக்கிறேன். இந்த கடினமான தருண த்தில் நாங்கள் இஸ்ரேலுக்கு உறுதியான ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது' என பிரதமர் மோடி தெரி வித்திருந்தார்.

பிரதமரின் பதிவுக்கு இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நார் கிலோன் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'பிரதமர் நரேந்திர மோடிக்கு மீண்டும் நன்றி. இந்திய சகோதர, சகோதரிகளிடம் இருந்து மிகப் பெரிய ஆதரவு இஸ்ரேலுக்குக் கிடைத்துள்ளது. ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க இயலாத நிலையில் உள்ளேன். எங்கள் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி என்று குறிப்பிட்டிருந்தார்.

# நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லையாம்

## வெளிநாடு சென்றது மனைவிக்கே தெரியாது என சி.ஐ.டி அறிக்கை

(3ம் பக்கத் தொடர்ச்சி) அடுத்து நைரோபிக்கு செல்ல நீதிபதி விமான பயணச்சீட்டை பயன்படுத்த வில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த தகவல்களின் அடிப்படையில் நீதிபதியின் வெளிநாட்டுப் பயணம் முன் கூட்டியே திட்ட மிடப்பட்டது என்பது தெளிவாகின்றது. சேவை யிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் உத்தியோக பூர்வ கடவுச்சீட்டைப் பயன்படுத்துவது சந்தேக த்தை ஏற்படுத்துகிறது.

மாவட்ட நீதிபதியின் மனைவி, தனது கணவர் நீதிபதி என்ற முறையில் கடுமையான மன அழுத் தத்தில் இருந்ததாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்பு குறைபாடு குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவித்தார். எனினும் சமீபகாலமாக அவ்வாறான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.செப்டம்பர் 23 ஆம் திகதி அதி காலை 2 மணியளவில் தனது கணவர் வெளி யேறியதாகவும், அவர் வெளிநாடு செல்வது தனக் குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.யு.பி.அமரதுங்க, கடந்த ஜனவரி மாதம் முதல் தனிப்பட்ட முறையிலும் உத்தியோகபூர்வமாகவும் நீதிபதியுடன் தான் நெருங்கிய தொடர்பு கொண்டி ருந்ததாகவும், நீதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இருப்பதாக அவர் தன்னிடம் ஒரு போதும் தெரிவித்ததில்லை எனவும் வாக்குமூலத் தில் தெரிவித்துள்ளார்.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திய இரண்டு அதிகாரிகளும், உத்தியோகபூ ர்வ இல்லத்தின் பாதுகாப்புக்காக 12 மணித்தியாலங்கள் உட்பட தினமும் நான்கு உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் பரிசோதகர் திலக ரத்ன வாக்குமூலம் அளித்துள்ளார்.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் கொன்ஸ்டபள் பிரேமன், பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று நீதிபதி ஒரு போதும் கூறவில்லை என்றும், உயிருக்கு அச்சுறு த்தல் இருப்பதாக நீதிபதி தம்மிடம் கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

மாவட்ட நீதிபதி வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தனது காரை விற்றுவிட்டு செப்டெம்பர் 23ஆம் திகதி வெளிநாடு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றப் பதிவாளரின் வாக்குமூலத்தில், தாம் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் முல்லைத்தீவு நீதிமன்றில் கடமையாற்றி வருவதாகவும், தனக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி ஒரு போதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள் ளார்.

சரவணராஜா செப்டம்பர் 25 முதல் ஒக்டோபர் 1 வரை வெளிநாட்டு விடுப்புக்கு விண்ணப்பித்த தாகவும் ,ஒகஸ்ட் 30 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்ல விண்ணப்பம் அனுப்பியதாகவும், வெளி நாட்டு விடுமுறைக்கு ஒப்புதல் அளித்து நீதிச் சேவை ஆணைக்குழு செப்டம்பர் 21 ஆம் திகதி தொலைநகல் அனுப்பியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு நீதிபதிக்கு இடம் பெற்ற அநீதிக்கு நீதி வழங்குமாறு கோரி தமது நீதிமன்ற தொடர் பணிப் பகிஷ்கரிப்பை நிறுத்தி கறுப்பு மாஸ்க் அணிந்து வழக்குகளில் ஆஜராக வுள்ளதாக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் த.பரஞ்சோதி தெரிவித்தார் .

அந்த வகையிலே தொடர் பணிப் பகிஸ்கரிப்பை நிறுத்திய முல்லைத்தீவு சட்டத்தரணிகள் முல்லை த்தீவு நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் கறுப்பு மாஸ்க் அணிந்தவாறு இருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# இவர்களுக்காக.... 28 ஒக்டோபர் 2023





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர் களது இடர்களைக் களையவும் கல்வியை மேம் படுத்தவும் எதிர்வரும் 28 ஒக் 2023 சனிக்கிழமை நடைபெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண் ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ள மையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார் கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்க ளால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

**விழா நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலையில் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இரண்டு கருணை யுள்ளங்களான வாகீசன் குடும்பம், தயாபரன் குடும்பம் இணைந்து 100.00 டொலர்களும்**

**திருமதி சரோஜினிதேவி கணேசலிங்கம் 100.00 டொலர்களும் வழங்கியுள்ளனர். (தொடரும்)**


தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# பொய்கள் புயல் போல் வீசும்! ஆனால் உண்மை மெதுவாய்ப் பேசும்!



பொய்கள் புயல்போல் வீசும் - ஆனால் உண்மை மெதுவாய்ப் பேசும்..'' -வைரமுத்துவின் வைர வரிகள் இவை

2001ம் ஆண்டிலிருந்து.. நான் நன்கறிந்தவர் திரு.அஜித் சபாரட்ணம். அவர் புதிதாய் காப்புறுதித் துறை முகவராக இணைந்த அந்த நாட்களில்.. நான் அலையோசை வானொலியில் அறிவிப்பாளராக இருந்தேன். இருவரும் இணைந்து பல நேர்காணல்கள் நிகழ்த்தினோம். ஆயுள் காப்புறுதி தொடர்பான பல பயனுள்ள தகவல்களை காற்றலைகளில் பகிர்ந்திருக்கின்றோம்.



Sun Life
PO Box 1601 Stn Waterloo / CP 1601 Succ Waterloo
Waterloo ON N2J 4C5

CANADA POST POSTES CANADA
Postage paid Lettermail Port payé Poste-lettres
7261996

**Confidential** - To be opened by addressee only. Please return to sender if undeliverable.
par le destinataire seulement. Si non distribuable, retourner à l'expéditeur.

On November 1, 2017, we sent you a letter asking you to contact us if you had had any personal financial dealings with your Sun Life Financial advisor at that time, Ajith Sabaratnam. Mr. Sabaratnam ceased to be an advisor with Sun Life Financial in November 2017.

This letter will confirm Sun Life did not intend to imply that Mr. Sabaratnam had done anything wrong and we regret if you were left with any such impression.

Sincerely,

வானொலி மூலம் ஏற்பட்ட அறிமுகம், நட்பு 20 ஆண்டுகள் தாண்டியும் வலுவாய்த் தொடரும் என அந்நாளில் நான் எண்ணியிருக்கவில்லை. எனக்கும் எனது குடும்ப உறவுகள் பலருக்கும் அவர் தான் நம்பிக்கைக்குரிய காப்புறுதி ஆலோசகர்-முகவர். எனக்கும் அவருக்குமான நட்பும் உறவும் மேலும் இறுக்கமாகத் தொடர்ந்தது. ஓர் நாள்.. 2017ல் அவர் காப்புறுதித் துறை ஆலோசகராகப் பணி புரிந்த சண் லைப் SunLife காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து எனக்கு ஓர் கடிதம் வருகிறது. அதில்.., அஜித் சபாரட்ணம் அவர்களை பணி இடைநீக்கம் செய்து ள்ளதாகவும் அவருடன் தனிப்பட்ட நிதிப் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டிருந்தால் தங்களைத் தொடர்பு கொள்ளுமாறும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

உடனே அஜித் சபாரட்ணம் அவர்களுக்கு அழைத்தேன்.. அவர் தொடர்பு கிடைக்கவில்லை. நான் உட்பட குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மிக மன உளைச்சலுக்கு உள்ளானோம். அவர் மீது தவறுகள் ஏதேனும் இருக்க வாய்ப்புகள் இருக்காது என்று அன்றே நம்பினோம். அவரை நீண்ட பல நாட்களாக நன்கு அறிதிருந்ததினால்.. நடந்தது என்ன?' என்பது குறித்து அறிய ஆவல் கொண்டோம். ஆனால்.. ஓராண்டுக்கு மேல் அவர் எங்களோடு பேசவில்லை.

பின் ஒரு நாள் அழைத்தார்.. 'நேர்மை ஓர் நாள் வெல்லும்!' என்றார். நானும் அதைத் திடமாக நம்பினேன். 'எம் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் கொடுத்த முகவரியற்ற கடிதத்தில் (மொட்டைக் கடிதம்) இருந்த உண்மையற்ற தகவல்களை நம்பி காப்புறுதி நிறுவனம் தவறான முடிவுகளை எடுத்து விட்டதாகத் தான் எண்ணுகின்றேன்' என்றார்.

2018ம் ஆண்டு சண் லைப் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். சுமார் 5 ஆண்டுகளுக்கு பின் நீதிமன்றத்திற்கு வெளியேயான ஓர் தீர்வு ஒப்பந்தம் (An out-of-court settlement agreement) எட்டப்பட்டது. அதன் பிரகாரம், தற்போது.. அவர் ஆலோசகராக இருந்த அனைத்து வாடிக்கையாளருக்கும் சண் லைப் காப்புறுதி நிறுவனம் 'திரு. அஜித் சபாரட்ணம் அவர்கள் எந்தத் தவறும் இழைக்கவில்லை எனவும் நாம் அவ்வாறு நினைப்பதற்கு தாம் தூண்டியிருந்தால் அதற்காக தங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்து கடிதம் அனுபியுள்ளது.

சண் லைப் SunLife காப்புறுதி நிறுவனம் என்பது கனடாவின் முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

காப்புறுதி முகவராக இணைந்து 25 ஆண்டுகளைத் தொடும் அஜித் சபாரட்ணம் அவர்கள் தற்போது 20ற்கும் அதிகமான காப்புறுதி நிறுவனங்களுடன் இணைந்து தனது காப்புறுதி முகவர் பணிகளைத் தொடர்ந்து சிறப்பாக செய்து வருகின்றார்.

இராமனும் அழுதான் தர்மனும் அழுதான் ஆனால் நீயோ அழவில்லை உனக்கோ அழிவில்லை - மீண்டும் வைரமுத்துவின் வைரவரிகள்.

நன்றி! வாழ்த்துகள் அஜித்!

–கஜன்


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்குமாறு கொழும்பு உயர்நீதிமன்றத்தின் முன் போராட்டம்







நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தை யும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் 09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்ட மொன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக பதவி விலகுவதாக குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத் திருந்ததுடன் நாட்டிலிருந்தும் வெளியேறியமை பல வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாட்டின் பல வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றி ணைந்து 09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ்டொப்பில் அமை ந்துள்ள உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப் புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இலங்கை மக்களின் உயிரைப் பயணம் வைத்தே வாகனத்தை ஓட்டுகின்றார்கள் - வெளிநாட்டு பயணி



இலங்கையில் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பது தங்களது உயிருக்கு மிகவும் ஆபத்தானது என ரஷ்ய சுற்றுலா பயணி ஒருவர் தெரிவித்துள்ளார். பொலன்னறுவை பொலிஸில் அவர் இதனை முறை ப்பாடாக பதிவு செய்துள்ளார்..

அவர் தனது அடையாளத்தை வெளியிடவில்லை. இலங்கைக்கு சுற்றுலா வந்த அவர் நாட்டின் அழ கைக் காண கொழும்பில் இருந்து பொலன்னறுவை க்கு பேருந்தில் பயணித்ததாக கூறியுள்ளார். பொலன்னறுவை செல்லும் வழியில் தனக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தை தெரிவிக்கையில்: .

பேருந்து 95 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றது. சில சமயங்களில் பிரதான சாலையில் வேகம் 100கிலோ மீற்றரை தாண்டியது. நான் எனது கூகுள் மேப் அப்ளிகேஷனைப் பயன்படுத்தி வேகத்தை பதிவு செய் தேன். பேருந்து பெரும்பாலும் 100 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட்டிக 'கொண்டிருந்தது. ஓட்டுநரிடம் சொல்லி எங்களைப் பாதுகாப்பாக பொலன்னறுவை க்கு அழைத்துச் செல்லச் சொன்னேன். ஆனால் அவர் பேசவோ கேட்கவோ இல்லை. பஸ் பறப்பது போல் இருந்தது. பஸ்சை பக்கவாட்டில் வளைத்து அலட்சியமாக மற்ற வாகனங்களை முந்தி சென்றார்

இது எங்கள் உயிருக்கு மிகவும் ஆபத்தானது. நாங்கள் சாக விரும்பவில்லை. நாங்கள் சுற்றுலாப் பயணிகள். நாங்கள் இலங்கையைப் பார்க்க விரும்பு கிறோம். நான் மிகவும் பயந்து, பேருந்தில் அழுதேன். இலங்கையில் மக்களின் உயிரைப் பணயம் வைத்து வாகனம் ஓட்டுகின்றனர்.

நகரப் பகுதிகளிலும் நகரங்களுக்கு வெளியேயும் பேருந்துகள் ஓட்டுவதற்கு வேக வரம்புகளை விதிக் கும் விதிகளைப் பயன்படுத்தவும். மணிக்கு 60 கிமீ வேகத்திற்கு மிகாமல் இருக்கவும் அதிகாரத்தில் உள்ளவர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

நான் பேருந்துகளில் ஏறும் போதெல்லாம், பயணத் தின் இறுதி வரை என்னைப் பாதுகாப்பாகவும் உயிருடனும் வைத்திருக்க கடவுளிடம் பிரார்த்திக்கி றேன். ஒவ்வொரு முறையும் நாங்கள் பேருந்தில் ஏறும்போது எங்கள் உயிரைப் பணயம் வைக்கி றோம். அது இலங்கையில் உள்ளவர்களுக்குத் தெரியும். அது பாதுகாப்பானது அல்ல. இலங்கையில் பேருந்துகளில் பயணம் செய்வது மிகவும் ஆபத்தா னது. என்று அவர் கூறியுள்ளார்.

# ரணிலின் பேச்சுக்கு கத்தோலிக்க ஆயர் பேரவை வைத்துள்ள ஆப்பு

அமெரிக்காவின் எவ்பிஐ (FBI) உட்பட பல நாடு களின் புலனாய்வு அமைப்புகள் வழங்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கைகளை தங்களு டன் ஜனாதிபதி பகிர்ந்து கொள்ள வேண்டும் என கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீங்கள் சமீபத்தில் ஜேர்மனியின் ஊடகத்திற்கு வழங் கிய பேட்டி குறித்து எங்கள் கவனம் திரும்பியுள் ளது. உயிர்த்த ஞாயிறு விடயத்தில் நீங்கள் கத்தோ லிக்க ஆயர் பேரவையுடனேயே விடயங்களை கையா ள்வதாகவும் கர்தினாலுடன் அவற்றைக் கையாள வில்லை எனவும் நீங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி யுள்ளீர்கள்.

கொழும்பு பேராயர் என்ற வகையில் கர்தினால் ஒரு தனி நபர் இல்லை. இலங்கையின் கத்தோலிக்க ஆயர் கள் பேரவையின் மிக முக்கிய உறுப்பினர் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதன் காரணமாக கர்தி னாலை தனித்து ஒருவராக நீங்கள் சுட்டிக்காட்டு வது கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கூட்டு ரிமையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக அமையும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் முழு மையை கத்தோலிக்க ஆயர்கள் பேரவைக்கு வழங்கி யமைக்காக நாங்கள் உங்களிற்கு நன்றி தெரிவிக்கின் றோம். இதன் தொடர்ச்சியாக பேட்டியின் போது நீங்கள் எவ்பிஐ- பிரிட்டிஷ் பொலிஸார் மற்றும் அவுஸ்திரேலிய இந்திய சீன பாகிஸ்தான் புலனாய்வு பிரிவினரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அறிக்கை சமர்பித்துள்ளதாக தெரிவித்துள்ளீர்கள். இந்த விடயம் பொதுமக்களின் கவனத்தையும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த அறிக்கைகளின் பிரதிகளை நீங்கள் எம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின் றோம். என கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வேண்டு கோள் விடுத்துள்ளது.

## வெளியேறிய நீதிபதி எங்கே?

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். நீதியை காப் பாற்றும் முயற்சியில் அவருக்கு ஏற்பட்ட அச்சுறு த்தல் மற்றும் ஆபத்துகள் காரணமாகவே அவர் வெளியேறியிருக்கின்றார்.

நீதித்துறையின் மீதான அச்சுறுத்தலை கண்டித்தே தமிழ் கட்சிகள் தங்களால் முடிந்த எதிர்வினை களை ஆற்றியிருக்கின்றனர். ஆனால் இந்த எதிர் வினைகளில் பெருமளவான மக்களை காண வில்லை பெருமளவான மக்களை திரட்டக் கூடிய ஆற்றலுடன் எந்தவொரு தமிழ் தேசிய கட்சியும் இல்லையென்பதும் தெட்டத் தெளிவாகத் தெரிகின் றது.

ஒவ்வொரு கட்சியும் மக்களை அணி திரட்டியிரு ந்தால் கூட பெருமளவான மக்கள் இவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொண்டிரு க்கவேண்டும். இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தி யில் ஒரு கேள்வி தவிர்க்க முடியாததாகின்றது.

அதாவது, குற்றச்சாட்டை முன் வைத்திருக்கும் நீதியை காப்பாற்றும் முயற்சியில் தனது பாது காப்புக் கருதி நாட்டைவிட்டு வெளியேறியிருக் கும் நீதிபதி சரவணராஜா தான் எதிர் கொண்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் இதுவரையில் பொது வெளிகளில் தோன்றி தனது குரலை பதிவு செய்ய வில்லை ஏன்?

அவர் தற்போது நெருக்கடிகளற்ற பிறிதொரு சூழலில் இருக்கின்றார். அவரை முன்னிறுத்தியே தமிழ் கட்சிகள் செயல்படுகின்றன. அவரின் தமிழ்ப்பற்றுக்காக தலை வணங்குவதாக பலரும் பேசி வருகின்றனர்.

ஆனால் அவரோ நீதியை காப்பாற்றும் முயற்சிக் காக ஒரு தமிழ் நீதிபதி என்பதால் தான் எதிர் கொண்ட சவால்களை அச்சுறுத்தல்களை அவமா னங்களை சர்வதேச அரங்குகளில் ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டும் ஆனால் அவர் அதற்கான சிறிய முயற்சியைக்கூட எடுத்ததாகத் தெரிய வில்லை. அவருக்காக மற்றவர்களே பேசிக்கொண் டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகி விட்டன. இந்த பதினான்கு வருடங்களில் நீதி என்பதே தமிழ்த் தேசிய அரசியலின் இலக்காக முன்னிறுத்தப்பட்டது.

அதற்கான இராஜதந்திர முயற்சிகளில் தாம் ஈடு பட்டுக் கொண்டிருப்பதாகவே அனைத்துத் தமிழ் கட்சிகளும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண் டன.

இதில் நாங்களே சரியானவர்கள் நாங்கள் மட்டுமே சர்வதேச விசாரணையை முறையாகக் கோரு கின்றோம் மற்றவர்கள் போர் குற்றவாளிகளை காப் பாற்ற முயற்சிக்கின்றனர் என்றவாறு, கஜேந்திர குமார் அணியினர் கூட்டமைப்பின் மற்றவர்கள் மீது கற்களை வீசினர். ஆனால் கூட்டமைப்போ தங்களுடைய செயல்பாடுகளின் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் தொடர்ந்தும் பேசுபொருளாக இருக்கின் றது என்று வாதிட்டனர்.

ஆனால் பதினான்கு வருடங்களை திரும்பிப் பார்த் தால், தமிழ் மக்களுக்கான நீதி விடயத்தில் எவ்வித முன்னேற்றங்களையும் காண முடியவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் தான், ஒரு தமிழ் நீதிபதி நீதியை காப்பாற்ற முற்பட்டபோது, அவரு க்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதான குற்றச்சாட்டு அரசியலாகியிருக்கின்றது.

அடிப்படையில் இது ஒரு முக்கியமான விடயம் இலங்கையின் நீதித் துறைக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியில்லை என்பதை உரத்துப் பேசு வதற்கான ஒரு வலுவான ஆதாரம்.

ஆனால், சம்பந்தப்பட்ட நீதிபதியோ நாட்டைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து எதுவுமே பேச வில்லை. அவர் சர்வதேச அரங்குகளில் பேச வேண்டும்.

ஒருவேளை அவர் அமைதியாகவே இந்த விடய த்தை கடந்து சென்று தனது சொந்த வாழ்க்கை க்குள் முடங்கிப் போவாராயின் அவரை முன் வைத்து காண்பிக்கப்படும் எதிர்வினைகள் பெறு மதியற்றுப் போகலாம்.

திகதி மாற்றம் பற்றிய முக்கிய அறிவித்தல்

29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை நடை பெற இருந்த ஊட்டும் கரங்கள் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை 6.00 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும். பொருளாதார நெருக்கடி, மழை கால ஆரம்பம், பிள்ளைகளின் கம்பளிப் போர்வை என பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளை கடந்த 11 ஆண்டுகளாக இவர்களுக்கான உணவுத் தேவை யையும் கல்வித் தேவையும் நிறைவு செய்து வரும் கனடியத் தமிழ்ச் சொந்தங்கள் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# ராஜபக்ஷாக்கள் பயணித்த இனவாத பாதையில் ரணிலும் பயணம்?

சிறுபான்மையின மக்களின் வாக்குகள் இனித் தேவையில்லை என்பதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தில் வெளிப்படுத்தியுள்ளார். சிங்கள மக்களின் வாக்குகளை கவர்வதற்காக ராஜபக்ஷர்கள் பயணித்த இனவாத வழியில் ஜனாதிபதி பயணிக்கத் தொடங்கியுள்ளார் என தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 06 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

22 மில்லியன் சனத்தொகை கொண்ட நாட்டில் ஒரு அரசாங்கம் சீரான அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது என்றால் அது மிகவும் பரிதாபத்துக்கு, அவ்வாறான நாட்டை கேவலத்துக்குரிய நாடாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது, அருகிலுள்ள தமிழ்நாட்டை பாருங்கள் சுமார் 76 மில்லியன் மக்கள் வாழ்கின்ற தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தலைமையில் ஒரு நல்லாட்சி நடந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சியை வழங்க முடியும் என்றால் ஏன் இலங்கையில் அது முடியாது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜேர்மன் நாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியிருந்தார். அந்த நேர்காணலில் அவரின் தொனி எமக்கு பல விடயங்களை தெளிவுப்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில் குண்டு வெடிப்புக்கள் மூலம் ஆட்சியை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் கைப்பற்றியதாக சொல்லப்படுகின்றது.



இவ்வளவு காலமும் ரணில் விக்கிரமசிங்கவை சிறுபான்மையின மக்கள் ஒரு வேறுபட்ட கண்ணோட்டத்துடன் பார்த்த நிலைமை இருந்தது. ஆனால் ஜேர்மன் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் ஒட்டு மொத்த சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்காக, ஆட்சியை பிடிப்பதற்காக பொதுஜன பெரமுனவினர் எப்படி முயன்றார்களோ அதேபோன்று சிறுபான்மையினத்தை விடுத்து,சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தேவையில்லை ,அவர்கள் தேவையில்லை என்ற நோக்கத்தில் தான் கருத்துக்களை ஆவேசமாக முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நேர்காணலை சிங்கள ஊடகங்கள் வரவேற்றுள்ளன,சிங்கள மக்கள் ஆதரிக்கின்றார்கள். வரவேற்கின்றார்கள். கடந்த காலங்களில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் ஜனாதிபாதியாக தற்போதிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேவைப்பட்டது.

ஆனால் தற்போது தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அவருக்கு தேர்தல் வெற்றியே ஒரே குறிக்கோளாகவுள்ள நிலையில் கோத்தபாய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ போன்று சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர அவர் வழங்கியுள்ள இந்த நேர்காணல் மூலம் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தனக்கு தேவையில்லை என்பதனை வெளிப்படுத்த்தியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபை,மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ராஜபக்ஷர்களும் கடந்த காலங்களில் இவ்வாறான வழியில் தான் ஆட்சிக்கு வந்தார்கள். இறுதியில் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் தேட அவர் முயற்சிக்கின்றார்.

இலங்கையின் குரங்குகளை சீனா மட்டுமின்றி வேறு நாடுகளும் கோருவதாக விவசாய அமைச்சர் கூறியிருந்தார். ஆகையால் முதலில் இங்குள்ள மனிதக் குரங்குகளை, அரசியல் குரங்குகளை ஏற்றுமதி செய்ய வேண்டும் வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்த வேண்டும் அப்படி செய்தால்தான் இந்த நாட்டிலுள்ள இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை காணமுடியும் என்றார்.

## நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், ஏனைய தமிழ் எம்.பிக்களையும் இணைத்து 06 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை சபையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தார். மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதி வழங்க கோரி அவர்கள் நாடாளுமன்றில் கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். வெள்ளிக்கிழமை காலை நாடாளுமன்றம் கூடிய போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டார்.

இதன் பின்னர் வேண்டும் வேண்டும் எமது நிலம் எமக்கு வேண்டும், அழிக்காதே அழிக்காதே தமிழர்களின் நிலங்களை அழிக்காதே என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளை கைலேந்திந்தி நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை சபையில் அமர்ந்திருந்த பிள்ளையான், சாணக்கியன் உள்ளிட்டோரின் ஆர்ப்பாட்டத்தை சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# இனநாயகமே ஜனநாயகமானால் அநீதியே நீதியாக மாறி விடும்!

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
– பனங்காட்டான் –

**குட்டித்தீவில் இதுவரை எத்தனை நீதிபதிகள் தங்கள் பதவிகளில் தப்பியுள்ளனர். எத்தனை பிரதம நீதியரசர்களுக்கெதிராக பதவி நீக்க (இம்பீச்மென்ற்) நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு 2013ல் என்ன நடை பெற்றது? இதுவெல்லாம் தெரியாதவரல்ல ``காணாமற்போயுள்ள`` நீதிபதி சரவணராஜா.**

குட்டித்தீவில் காணாமற் போயுள்ள நீதிபதி ரி.சரவணராஜா தொடர்பான வாதங்களும் விவாதங்களும், போராட்டங்களுமே இப்போதைய முக்கிய அரசியல். ``காணாமற்போயுள்ள`` என்று குறிப்பிடுவதற்கான காரணம், அவர் எங்கே இப்போது இருக்கிறார் என்று தெரியாத நிலையில், அல்லது அதிகாரபூ ர்வமாக எவரும் குறிப்பிட முடியாத நிலையில் இருப்பதுவே.

நீதிபதி சரவணராஜா கனடா வந்து விட்டதாக ஒரு வதந்தி. சுவிஸிற்கு சென்று விட்டதாக இன்னொரு வதந்தி. மேற்கு நாடொன்றுக்குச் செல்லும் வழியில் இடைத்தரிப்பாக சிங்கப்பூரில் நிற்பதாகவும் சொல்லப்படுகிறது.

கொழும்பில் அவர் தனது வாகனத்தை விற்றார் என்றும், இரண்டு நாடுகளின் ராஜதந்திரிகளை கொழும்பில் அவர் சந்தித்தாரென்றும் புலனாய்வாளர்களின் அறிக்கையை அடிப்படையாக வைத்து பகிரங்கமாகக் கூறுபவர்கள், எவ்வளவு தூரம் அவரை புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்தார்கள் என்பதை சொல்லப் போவதில்லை.

இந்த நிலையில் நீதிபதி அவர்கள் நாட்டைவிட்டு காணாமற் போயுள்ளதால் அவரும் இப்போதைக்கு காணாமலாக்கப்பட்டிருப்பவர் என்ற வகையறாக்குள் தள்ளப்பட்டுள்ளாரென்று துணிந்து கூறலாம். அவரது துணிச்சல் தான், புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்த நிலையிலும் அவரை தப்பிச் செல்ல வைத்திருக்கிறது என்று கூற வேண்டும்.

நீதிபதி சரவணராஜா விவகாரம் தொடர்பாக இப்போது அதிகம் பேசுபவர் அல்லது தன்னிலை விளக்கம் கொடுப்பவர் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர. இலங்கையின் தேசிய பாதுகாப்பு துறைசார் மேற்பார்வைக் குழுவின் அக்கிராசனர் இவரே என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

தாம் ஒருபோதும் நீதிபதியின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லையென்றும், அச்சுறுத்தல் விடுக்கவில்லையென்றும், குருந்தூர்மலை விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்குள்ள சிறப்புரிமையின் கீழ் உரையாற்றியதை உயிர் அச்சுறுத்தல் எனக் கூறமுடியாதெனவும் விளக்கமளித்து வருகிறார்.

சரத் வீரசேகர சாதாரண ஒரு எம்.பி. அல்ல. கடற்படையில் அட்மிரல் பதவி வகித்த உயர் அதிகாரி. கோதபாய ராஜபக்சவின் வியத்கம உள்வட்டத்தின் முக்கியஸ்தர். இவரது சகோதரரான மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர யுத்த காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட ராணுவ இணைப்பதிகாரியாக பணியாற்றியவர். 2007ல் ஓய்வு பெற்ற பின்னர் பௌத்த பிக்குவாக மாறி அம்பாறை குகைக் கோவிலில் புத்தங்கல ஆனந்த தேரோவாக இருந்து 2021ல் காலமானவர்.

இந்தப் பின்னணிகளை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், இலங்கையின் அரசியல் வழித்தடத்தில் ``உயிர் அச்சுறுத்தல்`` என்பதன் அர்த்தம் என்னவென்று சரத் வீரசேகரவுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டுமென்பதை நினைவுட்டவே. கையில் கத்தியுடனோ, தோளில் துப்பாக்கியுடனோ சென்று பயப்படுத்துவது மட்டும் தான் உயிர் அச்சுறுத்தல் அல்ல. ஒருவரை இலக்கு வைத்து தாக்க, கடத்திச் செல்ல, கொலை செய்ய, காணாமலாக்கக் கூடியதான முறையில் தூண்டக்கூடிய வகையில் உரை நிகழ்த்துவதும் உயிர் அச்சுறுத்தலே என்பது படைத்துறை குடும்பத்தைச் சேர்ந்த சரத் வீரசேகரவுக்கு தெரியாதெனச் சொல்ல முடியாது.

எவ்வகையிலாவது நீதிபதி சரவணராஜாவை கைது செய்து அரசியல் மயப்படுத்தப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தி பதவி நீக்கம் செய்து சிறைக்குள் தள்ள வேண்டுமென்ற அடிப்படை நோக்கம் சரத் வீரசேகரவுக்கு இருந்தது. அல்லது நீதிபதி மீது காடையரைக் கொண்டு தாக்குதல் நடத்துவதன் மூலம் இவருக்கு மட்டுமன்றி மற்றைய நீதிபதிகளுக்கும் ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்ற எண்ணமும் இருந்துள்ளது.

இந்த நோக்கங்களுடன் அவர் தொடர்ந்து நீதிபதி மீது ``தாக்குதல்`` உரைகளை நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய போது அதனைத் தடுக்காத சபாநாயகர், நீதியமைச்சர், பிரதமர் ஆகியோரும் உடந்தையாக இருந்துள்ளார்கள்






என்பதை அவர்களின் மௌனத்தின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. இலங்கையில் அரசியல்வாதிகள் மீது பதவி நீக்க (இம்பீச்மென்ற்) பிரேரணைகள் முன்னெடுக்கப்பட்டனவாயினும் அவை தோல்வியடைந்தன. ஆனால், நீதித்துறையில், நீதிபதிகள் பிரதம நீதியரசர்கள் போன்றவர்கள் மீதான பதவி நீக்கும் முயற்சிகள் சகல கட்சிகளின் ஆட்சிக் காலங்களிலும் சாதாரணமானவையாக நிகழ்ந்துள்ளன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த காலத்திலிருந்து அவர் தனிப்பட்ட வழக்கறிஞராக பல வருடங்கள் இருந்தவர் நிவில் சமரக்கோன். முன்னர் ஒரு போதும் நீதிபதியாகக்கூட இருந்திராத இவரை பிரதம நீதியரசராக நியமித்து, இவர் முன்னிலையில் 1978 பெப்ரவரி 4ம் திகதி ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தார் ஜெயவர்த்தன.

சில ஆண்டுகளின் பின்னர் பொது வைபவம் ஒன்றில் ஜெயவர்த்தனவை இவர் விமர்சித்து உரையாற்றியதால் அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாச தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு இவரை குற்றவாளியென அறிக்கையிட்டு பதவி நீக்கப் பிரேரணைக்கு முன்னறிவிப்பு கொடுத்தது. பிரதம நீதியரசர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுவிட்டார் நெவில் சமரக்கோன்.

2001ல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவி வகித்த வேளையில் அவரது அணியைச் சேர்ந்த 77 எம்.பி.க்கள் ஒப்பமிட்டு அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவை பதவி நீக்கும் பிரேரணைக்கு முன்னறிவிப்புக் கொடுத்தனர். ஆனால், அப்போதிருந்த அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் அந்த முயற்சியை சந்திரிகா தரப்பால் தொடர முடியாது போய்விட்டது.

2021 மே மாதம் 18ம் திகதி ஷிரானி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசராக நியமித்தார் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. ஒரு வருடம் முடிவடைவதற்குள்ளேயே பிரதம நீதியரசரின் சில தீர்ப்புகள் மகிந்தவினால் ஜீரணிக்க முடியாது போயிற்று. நாட்டிலுள்ள எந்தக் காணியையும் அரசுடைமையாக்கும் சட்டமூலம், திவி நெகும சட்ட மூலம் ஆகியவைகளை ஷிரானி பண்டாரநாயக்க தலைமையிலான உச்ச நீதிமன்றம் நிராகரித்ததால், அவரை பதவி நீக்கும் நடவடிக்கையில் மகிந்த இறங்கினார். நாடாளுமன்றத்தில் 155 எம்.பிக்களின் ஆதரவு இருந்ததால் பதவி நீக்கப் பிரேரணை இலகுவாக நிறைவேற ஷிரானி பண்டாரநாயக்க வீடேகினார்.

காலியான பிரதம நீதியரசர் பதவிக்கு முன்னர் ஒருபோதும் சாதாரண நீதிபதியாகக் கூட பதவி வகித்திராத மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்து அந்தக் கதிரைக்கே கறை பூசினார் மகிந்த. மகிந்தவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு மொஹன் பீரிஸ் எவ்வாறு துணை புரிந்தாரென்பதை எழுதினால் ஒரு புத்தகமாக்கலாம்.

ஷிரானியின் பதவி நீக்கத்துக்கு முன்னர் முக்கிய வழக்கொன்றின் தீர்ப்பினை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதிகளான அனில் குணரத்தின, எஸ். சிறீஸ்கந்தராஜா ஆகியோர் இனந்தெரியாதோர்களால் அச்சுறுத்தப்பட்டது நேரடியான கொலைப் பயமுறுத்தலாக பதிவானது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது கொழும்பு மாவட்ட நீதிபதி ஒருவரின் வீட்டுக்கு தொடர்ச்சியாக கல்லெறி இடம் பெற்றது. காடையர் கூட்டம் அவரது வாசஸ்தலத்தைச் சுற்றி எவரும் வெளியேற முடியாது அச்சப்படுத்திக் கொண்டிருந்தது. நீதிபதி என்ற வகையில் தமக்கான பாதுகாப்புக்கு பொலிஸாரின் உதவியை நாடினார். ஆனால் அவரின் அழைப்புக்கு பொலிஸார் செவி சாய்க்கவில்லை. நீதிபதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டாமென்று பெரியவர் உத்தரவிட்டாரென்பது பகிரங்கமானது.

1983ம் ஆண்டில் இன்னொரு சம்பவம் இடம் பெற்றது. அரசுக்குச் சார்பாக ஒரு வழக்கில் தீர்ப்பளிக்க ஒப்புக் கொள்ளாததாகக் கூறி நீதியரசர்கள் விமலரட்ண மற்றும் கொலின்–தொம் ஆகியோரை பதவி நீக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. பிரேமதாசவை ஜனாதிபதி பதவியிலிருந்து இறக்க லலித் அத்துலத் முதலியும் காமினி திசநாயக்கவும் எடுத்த பதவி நீக்கப் பிரேரணை முயற்சி முறியடிக்கப்பட்டது. அப்போதைய சபாநாயகர் எம்.எச்.மொஹமட் இவ் விடயத்தில் பிரேமதாச பக்கம் சாய்ந்து பிரேரணையை ரத்தாக்கினார். இது நீதித்துறை சார்ந்ததல்ல. அரசியல்மயப் படுத்தப்பட்ட செயற்பாடு.

மேலே குறிப்பிடப்பட்ட நீதியரசர்கள் மீதான பதவி நீக்க முயற்சிகளின் வரலாறு நீதிபதி சற்குணராஜாவுக்குத் தெரியாததல்ல. அதனால் தான் அவர் சமயோசிதமாக நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல திட்டமிட்டிருக்கலாம்.

அவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க அவர் நேரில் வர வேண்டும் என்பதுவும், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால் நீதிபதி என்ற பதவி வழியாக சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய அவருக்கு அதிகாரம் இருந்தது என்பதுவும், தமக்கான நீதிபதி அதிகாரங்களை எதற்காக அவர் பயன்படுத்தவில்லையெனக் கேட்பதுவும்.... இவையெல்லாம் வெற்றுப் பேச்சுகள்.

ஒருவர் கொலை செய்யப்பட்ட பின்னரும் அது தொடர்பான கொலை வழக்கை நடத்துவதே சட்டம். சம்பந்தப்பட்டவர் நாட்டில் இல்லையென்றாலும் நீதி விசாரணை நீதியாக நடைபெற வேண்டியது கட்டாயம். இதற்காகவே இன்று போராட்டம் நடைபெறுகிறது.



இனநாயகத்தின் மேலாண்மை ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்ட நாட்டில், அநீதி என்பதுவே நீதியாக உலா வருகிறது. சட்டத்துறையும் நீதி பரிபாலனமும் அரசியலாளர்களின் பொக்கற் நாய்களாக மாறிவருகின்றன.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

07 ஒக்டோபர் 2023 முதல் 13 ஒக்டோபர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினசிங்கம் மதியழகன்

புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி யோகம்மா நல்லையா

சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திருமதி யோகம்மா நல்லையா அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாள் 13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி யோகம்மா நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 40வது பிறந்த நாள் நினைவாக



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது 40வது பிறந்த நாள் 15 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 14 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3ம் மாத நினைவஞ்சலி



### திருமதி மாலினி குலேந்திரன்

பன்னிப்பிட்டிய மகரகமவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மாலினி குலேந்திரன் அவர்களது மூன்றாம் மாத நினைவு நாள் 13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மாலினி குலேந்திரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**மறவாதீர்கள்! "ஊட்டும் கரங்கள்" நிகழ்வுத் திகதி 28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




08 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




09 ஒக்டோபர் 2023 திங்கட்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மதியழகன் இரத்தினசிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா இணையர்களின் செல்வப்புதல்வன் துவாரகன் சசிதரனின் 27வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாள் செல்வன் துவாரகன் தனது பெற்றோர்கள், சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





12 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையரது நினைவாக மஹாலய விரத உபயமாக கனடாவில் வசிக்கும் அன்னார்களது பிள்ளைகள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புவிபாலன் பானுமதி இணையர்களின் செல்வப்புதல்வன் அர்ச்சயன் புவிபாலனின் 18வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாள் செல்வன் அர்ச்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை பனிப்பிட்டிய மகரகமவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மாலினி குலேந்திரன் அவர்களது மூன்றாம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்





13 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி யோகம்மா நல்லையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 ஒக்டோபர் 2023 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 ஒக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வத்சலா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave. E. Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles, Yellow Building, 6055 Unit C-102 Scarborough, ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா NANTHA CATERS Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

RE/MAX Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com

JESEETHA JEGANATHAN Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
Email : jeseehomes@gmail.com
www.jeseehomes.com
1780 Albion Road # 2&3 Etobicoke ON M9V 1C1
Century 21 People's Choice Realty Inc. Brokerage
PLATINUM AWARDS WINNER 2000 - 2016
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
*An Independent member broker, realtor.*Not intend to solicit properties already listed for sale.
JAY JEGANATHAN, BA Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
E-mail: jjrealtoronto@gmail.com
JEYSURESH JEGANATHAN Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
E-mail : jey.c21pc@gmail.com
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

GODAVARI Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759





வெள்ளி விழா கண்ட
அரவிந்தனின்
மெகா ரியூனேர்ஸ்
இசையில்

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை
12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்



பிரபல பின்னணிப் பாடகர்
## முகேஷ்

பிரபல பின்னணிப் பாடகி
## சுர்முகி



**OCTOBER 28 2023**
**SAT@ 6:00PM**

**ARMENIAN COMMUNITY CENTRE**
**50 HALLCROWN PLACE**
**TORONTO**
**(VICTORIAL PARK & CONSUMER ROAD)**

அன்பளிப்பு
**$200.00 • $100.00 • $50.00**
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

கனேடிய தமிழ்ப்பாடகர்கள்
இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

**சிறப்பு உணவு:** றொறன்ரோவின் முன்னணி உணவகமான **நந்தா கேற்றறிங்** வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**லோகன் இராசையா**
**416 991 1292**
**Can West Transport**

TECHSOURCE Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON 416.757.9111
994 Albion Rd Etobicoke, ON 647.352.2229

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE.E., UNIT #3, SCARBOROUGH, ON M1J 2H4
Tel:416-269-7197

HV HAYHER & VASAN LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
• Personal Injury • Real Estate • Wills and Estates • Immigration
vasan@hvlaw.ca 905-461-1515

மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்க்கெட்
இலங்கை, இந்தியா மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough, ON M1X 0C8
416 292 8585

U Star Art
Get an Exclusive Offer With an Exciting Package!
All In One Place
Our Services
• Bridal Makeup • Bridal Saree Blouse • Bridesmaid • Flower Girls Dress • Saree Blouse • Cake Decorating • Rich Cake
PRIYA UTHAYAN
(416) 897-5816
647-945-7212

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

TIMES IRON WORKS INC. Fabricators & Erectors
Times Metals Sales

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**சாந்தா பஞ்சலிங்கம்**
**416 200 5470**
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
creditsolutioncanada.com
Tel: 416 439 0224
Fax: 416 439 0226

Century 21 Innovative Realty Inc. Brokerage
Jude GNANENDRAN Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
60 Corporate Dr. Suite 307, Toronto, ON. Canada M1H 3G5
RAJ SUBRAYAM Director

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Foresters
KABIS

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மொசாட் VS ஹமாஸ் :
# மத்திய கிழக்கின் போர்வலு மாற்றம் !
# மொசாட்டை ஏமாற்றி ஹமாஸ் அதிரடி!

**ஹமாஸ் கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது.**

மொசாட் இஸ்ரேலின் உளவுத்துறை மட்டுமன்றி, உலகின் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் மொசாட் ஆகியவற்றையே ஏமாற்றி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி உள்ளது பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு.

பாலஸ்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் போராட்டக் குழுக்களில் மிகப் பெரிய அமைப்பே ஹமாஸ். கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது ஹமாஸ் அமைப்பு.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்பட அந்நாட்டின் முக்கிய நகரங்களில் பல இடங்கள் பற்றி எரிந்தன. ஹமாஸ் தாக்குதலுடன், ஆயுதக் குழுவினரும் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேலும் பதிலடி தாக்குதலை தொடங்கியுள்ளதால், 2021-ம் ஆண்டுக்குப் பிறகு அங்கே மீண்டும் பெரிய அளவிலான போர் தொடங்கியுள்ளது. அமெரிக்க ஆதரவுடன் அதிநவீன ராணுவத்தை கட்டமைத்துள்ள இஸ்ரேலை அவ்வப்போது நிலைகுலையச் செய்யும் ஹமாஸ் அமைப்பினரின் இத்தாக்குதல் எவராலும் கணிப்பிட முடியாமல் போனது.

**இஸ்ரேல் தனி நாடு உருவாக்கம்:**

பத்து மில்லியன் மக்கள் தொகை மட்டுமே கொண்ட ஒரு சிறிய நாடு. இஸ்ரேல் மீது பல்வேறுபட்ட எதிர்மறை கருத்துகள் இருந்த போதிலும் தன்னம்பிக்கைக்கு இந்த நாட்டை விட உலகில் வேறு எந்த நாட்டையும் உதாரணமாக கூற முடியாது.

1948 மே 14இல் இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் நாட்டின் அதிகாரபூர்வ மொழிகள் ஹீப்ரு மற்றும் அராபி. இஸ்ரேல் நாட்டின் மக்கள் தொகையில் 74 வீதம் பேர் யூதர்கள் மற்ற 20.8 வீதம் பேர் அரேபியர்கள் ஆவர். உலகில் பல படித்த அதிக மேதாவிகள் இங்குதான் உள்ளனர். உண்மையில் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரம் மிக்கவர்கள் இஸ்ரேல் நாட்டினர் என்றே கூறலாம்.

**மொசாட் உருவான கதை:**

பிரிட்டிஷ் அரசு பாலஸ்தீனத்தில் ஆட்சி புரிந்துக் கொண்டிருந்த காலத்தில் அங்கே அதிகமாக வாழ்ந்தவர்கள் அரேபியர்கள். யூதர்களின் எண்ணிக்கை மிக குறைவே. அப்போது இருந்து அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் மறைமுகமாக போர் நடந்துக் கொண்டு தான் இருந்தது.

அரேபியர்கள் தங்கள் நாட்டில் யூதர்கள் வாழ்வதை விரும்பவில்லை. ஆனால் அன்றைய காலக்கட்டத்தில் ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் அரசு யூதர்கள் எண்ணிக்கை அதிகரிக்க உதவியது. உலகம் முழுவதும் வாழ்ந்த யூதர்கள் ஒரு காலக்கட்டத்தில் இஸ்ரேலை நோக்கி வர துவங்கினர்.

ஜெர்மனி சர்வாதிகாரி ஹிட்லர் ஆட்சியில் நாஜி படையின் மூலம் யூதர்கள் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர். அப்போது ஹிட்லரிடமிருந்து யூதர்களை காப்பாற்ற இஸ்ரேல் மக்கள் எந்த அளவு வேண்டுமானாலும் முயற்சி செய்ய தயாராக இருந்தனர். அவர்கள் மிகப் பெரிய செலவில் கப்பல்களை வாங்கினர்.

ஜெர்மனியில் இருந்து இஸ்ரேல் வருவது அந்த சமயத்தில் மிக இக்கட்டான ஒரு சூழலே. ஒரு புறம் நாஜி படைகள் யூதர்களை தேடி கொண்டிருக்க மறுபுறம் பிரிட்டிஷ் அரசும் யூதர்கள் பெரும் அளவில் வந்து குடியேறுவதை விரும்பவில்லை.

இதற்கு பின் உலகில் வாழ்ந்த யூத மக்களை ஒன்றிணைந்து கொண்டு வர வைக்க அமைக்கப்பட்ட ஒரு ரகசிய குழு தான் இந்த உளவு அமைப்பு. இந்த உளவு அமைப்பின் பெயர் மொசாட் லிஅலியா பெட்.

காலமாற்றத்தில் இந்த அமைப்பு மொசாட்டாக வளர்ச்சி அடைந்தது. இஸ்ரேலுக்கும் யூதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்த நினைக்கும் அனைத்து தகவல்களும் மொசாட்டின் தலைமையகத்துக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படும். உலகின் மிகப் பெரிய உளவு அமைப்புகள் சி.ஐ.ஏ. மற்றும் எம்.ஐ.6 க்கு அடுத்த இடத்தில் மொசாட் உள்ளது.




**சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை**

இஸ்ரேல் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் சிறியதொரு நாடு, ஆனால் ராணுவத்தில் உளவு துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடி இஸ்ரேல் தான்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புகளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பு. உலகிலேயே மிக திறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பு மொசாட்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை தான் மொசாட். ஆனால் அமெரிக்காவிடம் தான் பயிற்சி பெற்றது மொசாட் ஆனால் இப்போது அமெரிக்கா சி.ஐ.ஏ.வே ஆச்சரியப்படும் அளவிற்கு மொசாட் வளர்ந்து உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிர்காலத்தில் எதிரி ஆவான் என்று மொசாட் யாரை யாவது எண்ணினால் ஆரம்பத்திலேயே அந்த அமைப்பை அழித்து விடும். 1972ம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேல் வீரர்கள், பயிற்சியாளர்கள் 11 பேர் பாலஸ்தீன போராளிகளால் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்குக் காரணமான ஒவ்வொருவரையும் பழி வாங்கி விட்டுதான் இஸ்ரேல் அமைதியானது.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாட்டில் இஸ் ரேல் உளவு அமைப்பு மொசாட் மேற்கொண்ட ரகசிய படுகொலை வேட்டை யின் பெயர் **Operation Wrath of God.**



இஸ்ரேல் மிகச் சிறிய நாடாகவே இருந்த போதிலும் அந்த சிறிய நாட்டை பார்த்து பொருளாதாரத்திலும் மக்கட்தொகையிலும் மிகையாக இருக்கும் மேற்குலக நாடுகள் கூட பயப்படுகிறது என்றால் அதற்கு மிக மிக முக்கிய காரணம் மொசாட்.

இஸ்ரேல் மிகச் சிறிய நாடாக இருந்தாலும் கூட எந்த நேரமும் தன்னை அழிக்க காத்துக் கொண்டிருக்கும் அரபு தேசங்கள் மத்தியில் மிகச் செல்வ செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**ஹமாஸ் படைப்பலம்:**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் இஸ்ரேலில் கட்டுப்பாட்டில் இருந்த இந்த காசா தற் போது ஹமாஸ் அமைப்பின் கட்டுப் பாட்டில் உள்ளது. மேலும் இஸ்ரேலை ஹமாஸ் அமைப்பு காசாவில் நுழைய விடாமல் தடுத்து வருகிறது.

இதனால் காசா பகுதியை கைப்பற்ற இஸ்ரேல் முயற் சிக்கும் நிலையில் ஹமாஸ் தடையாக உள்ளது. அத்துடன் ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகள் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான் கடந்த சனி (7.10.23) திடீரென்று ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தினர். மேலும் பாராசூட்டில் ஹமாஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியுடன் இஸ்ரேலுக்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதையடுத்து போர் தொடங்கி உள்ளதாக கூறி இஸ்ரேல் படையினர், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர். காசா பகுதிக்குள் நுழைந்து வான்வெளி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தற்போது போர் தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது வரை இருதரப்பினரையும் சேர்த்து 1300க்கும் அதிகமானவர்கள் பலியாகி உள்ளனர். மேலும் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் தான் போர் உக்கிரமடைய உள்ளது.

அதாவது ராணுவம், விமானப்படை, கப்பற்படையை பொறுத்தமட்டில் இஸ்ரேல் மிகவும் வலுவாக உள்ளது.

இஸ்ரேலில் ராணுவ வீரர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். புதிய தொழில்நுட்பங்களுடன் பல பாதுகாப்பு அமைப்புகளை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. நவீன உபகரணங்கள், சிறந்த உளவுத்துறை அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது. அதோடு அதிநவீன போர் விமானங்கள் உள்ளன.

அதாவது ஐடிஎப் எனும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை என்பது தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படையை ஒருங்கிணைத்துள்ளது. மேலும் இஸ்ரேலை பொறுத்தமட்டில் கட்டாய ராணுவ சேவை என்பது நடைமுறையில் உள்ளது. இதனால் பெரும்பாலான ஆண்கள் ராணுவம், ஆயுத பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். மேலும் உலகில் மிகச்சிறந்ததாக கருதப்படும் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் ‘அயர்ன் டோம் டிபென்ஸ் சிஸ்டம்’ அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது.

**ஏவுகணை பாதுகாப்பு கொண்ட இராணுவம்:**

அதேபோல் டேவிட் ஸ்லிங் மற்றும் அரோ போன்ற

(22ம் பக்கம் பார்க்க)

# அரோகராப் போராட்டம்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



ஒரு நீதிபதிக்கு நீதி கேட்டுத் தமிழ் மக்கள் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளெங்கும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டத்தைக் குறிப்பிட வேண்டும்.

இது குத்து விளக்குக் கூட்டணியால் ஒழுங்கு செய்யப்பட்டது.எனினும் ஏனைய கட்சிகளும் அதற்கு ஆதரவைக் காட்டின. அந்தப் போராட்டம் சரியான நேரத்தில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது சொந்த மக்களின் கவனத்தையும் உலக சமூகத்தின் கவனத்தையும் ஈர்க்கத்தக்க விதத்தில் பிரம்மாண்டமானதாக முன்னெடுக்கப்பட்டதா?

மருதனார் மடத்திலிருந்து தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டது. போராட்டத்தில் இணையுமாறு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. எனினும் அது ஒரு நீண்ட மனிதச் சங்கிலிப் போராட்டமாக அமையவில்லை. மனிதச் சங்கிலி தொடர்ச்சியானதாக அமையவில்லை. கொக்குவில் சந்தியில் கட்சித் தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும் முழந்தாளிட்டு நீதி தேவதையிடம் முறைப்பாடு செய்தார்கள். அங்கே அரோகரா கோஷமும் எழுப்பப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன் பங்குக்கு ஒரு மனிதச் சங்கிலிப் போராட்டத்தைச் செய்தது. இரண்டு மனிதச் சங்கிலிகளுக்கும் இடையே தொடுப்பு இருக்கவில்லை. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் அங்கே காணப்பட்டார்கள். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காணவில்லை. முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினரும் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரும் அங்கே காணப்பட்டார்கள். சட்டத்துறையை சேர்ந்தவர்கள் அதிகரித்த அளவில் பங்கு பற்றவில்லை. சிவில் சமூகங்களும் குறைவு. பல்கலைக்கழக மாணவர்களைக் காணவில்லை. கட்சி ஆதரவாளர்கள் கூட முழு அளவுக்குப் பங்கு பற்றியதாகத் தெரியவில்லை.

அப்படி ஒரு போராட்டத்தை முதலில் சிந்தித்த கட்சிகள் அதைக் குறித்து நடைமுறைச் சாத்தியமான வழிகளில் திட்டமிட்டிருக்கவில்லையா? அது மிக எளிமையான ஒரு கணிதம். மருதனா மடத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையிலுமான மொத்தத் தூரத்தைக் கணக்கிட்டு அவ்வளவு தூரத்துக்கும் கைகோர்த்தபடி நிற்பதற்கு எத்தனை பேர் தேவை என்பதை கண்டு பிடித்திருக்கலாம்.

அதன் பின் அத்தூரத்தைப் பங்கு கொள்ளும் கட்சிகளின் தொகையால் பிரித்து, ஒவ்வொரு கட்சிக்கும் இத்தனை கிலோ மீட்டர் என்று பிரித்துக் கொடுத்திருக்கலாம். அதன்படி ஒவ்வொரு கட்சியும் தனக்குரிய தூரத்துக்கு வேண்டிய ஆட்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தாலே போதும். மனிதச் சங்கிலி வெற்றிகரமானதாக அமைந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தால் மக்கள் வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? ஆனால் இது போன்ற மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அடிமட்டக் கட்டமைப்புகள். வலையமைப்புகள் கட்சிகளிடம் குறைவு என்பதைத்தான் போராட்டம் மீண்டும் ஒரு தடவை உணர்த்தியது.

தாங்கள் அழைத்தால் மக்கள் வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? எந்த ஒரு போராட்டத்திற்கும் வீட்டு வேலை அவசியம். எல்லாவற்றையும் கணிதமாக கணக்கிடலாம். அதில் எங்கேயும் கற்பனையான எதிர்பார்ப்புகளுக்கு இடமில்லை. கடந்த சில தசாப்தங்களாக தமிழ் மக்கள் மத்தியில் வெற்றி பெற்ற எல்லாப் போராட்டங்களின் பின்னணியிலும் கடுமையான உழைப்பு இருந்திருக்கிறது. ஒன்றிணைவு இருந்திருக்கிறது. மக்கள் தாமாகத் திரள்வதற்கு இது ஒன்றும் கோவில் திருவிழா அல்ல. அல்லது பண்டிகைக் காலச் சந்தையும் அல்ல.கட்சிகள் தங்களுடைய கீழ் மட்ட வலையமைப்புக்கள் ஊடாக மக்களைத் திரட்டிக் கொண்டு வர வேண்டும். ஆனால் கடந்த புதன் கிழமை அதுநடந்ததாகத் தெரியவில்லை.



போதாக்குறைக்கு போராட்டத்தின் முடிவில் கொக்குவில் நீதி தேவதையிடம் முழந்தாளிட்டு மன்றாடப்பட்டது. முழந்தாளிட்டு மன்றாடுவது போராட்டமாகி விடாது. அதைத் தேவாலயங்களில் செய்யலாம். சில ஆண்டுகளுக்கு முன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நினைவு கூர்தல் நிகழ்வில் அவ்வாறு முழந்தாளிட்டு நின்றதாக ஞாபகம். அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கறுப்பினத்தவர் போலீசாரால் கொல்லப்பட்டதையடுத்து போராட்டங்கள் வெடித்தன. அதன் போது அமெரிக்க போலீஸ் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரிடம் மன்னிப்பு கேட்கும் விதத்தில் ஒரு காலில் முழந்தாளிட்டு அமர்ந்து மன்னிப்பு கேட்டது. அது மன்னிப்புக் கேட்பது. போராட்டம் அல்ல. ஆனால் கொக்குவில் நடந்தது ஒரு போராட்டம்.

தமிழ் மக்கள் ஆலயங்களில் மன்றாடியிருக்கிறார்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக மன்றாடவில்லை. வீரமாகப் போராடியிருக்கிறார்கள். விதி திரைப்படத்தில் நீதிமன்றக் காட்சியில் கதாநாயகி சுஜாதா தனது தர்க்கத்தை முன் வைத்த பின் அழுது மன்றாடி மயங்கி விழுந்து நீதி கேட்கின்றார். ஆனால் நீதிக்காகப் போராடும் மக்கள் அப்படியெல்லாம் மன்றாட முடியாது. பைபிளில் ஒரு வசனம் உண்டு நீதியின் கிரீடம் முட்களாலானது என்று. நீதிக்கான போராட்டம் அத்தகையது தான்.

கண்ணகி தன் கணவனுக்கு நீதி கேட்டு பாண்டிய மன்னனிடம் மன்றாடவில்லை. அவளுடைய கோபம் பாண்டியனை கொன்றது மதுரையைச் சுட்டெரித்தது. சாவித்திரி தன் கணவனைக் காப்பாற்றுவதற்காக யமனோடு அதாவது மரணத்தோடு போராடினாள். இவை காப்பிய கால உதாரணங்கள். போராட்டங்கள் மன்றாட்டங்களாக இருக்க முடியாது. அவை வீரமானவைகளாகவும் அர்ப்பணிப்புக்கு தயாரானவைகளாகவும் இருக்க வேண்டும்.

நவீன காலத்தில் தமிழ்மக்கள் மன்றாடி எதையும் பெறவில்லை. போராடித் தான் பெற்றார்கள். பதின்மூன்றாவது திருத்தமே தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவு தான்.ஆனால் தமிழ்க் கட்சிகள் நோகாமல் போராடப் பார்க்கின்றனவா? அல்லது கடமைக்கு போராடுகின்றனவா? அல்லது 2009க்குப் பின்னரான அறவழிப் போராட்ட வடிவத்தை குறித்துத் தமிழ்க் கட்சிகளிடம் படைப்புத்திறன் மிக்க தரிசனம் எதுவும் கிடையாதா?

போதாக்குறைக்கு போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் கோஷம் எழுப்பும் போது ஒவ்வொரு கோஷத்தின் முடிவிலும் அரோகரா சொல்லப்பட்டது. அரோகரா என்றால் என்ன? அரன் — சிவன் ' ரோகம் — துன்பம், தீவினை, வலி அர– அறுக்க. சிவனே ரோகம் அறுக்க'' என்றும் பொருள்படும். அரோகரா முதலில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பயன்படுத்தப்பட்டது என்று ஒரு தகவல் உண்டு.

திருஞானசம்பந்தர் ஒருமுறை பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்யும் போது, அவரைச் சுமந்து கொண்டு வந்தவர்கள் 'ஏலேலோ ஏலேலோ' என்று களைப்பைக் குறைப்பதற்காக பாடிக் கொண்டு வந்தனர். அதைச் செவிமடுத்த திருஞான சம்பந்தர், பொருளற்ற ஒன்றைச் சொல்வதை விட பொருளோடு ஒன்றைச் சொன்னால் நல்லது என்று,அர ஹரோ ஹரா' என்பதைக் கற்றுக் கொடுத்தார். அதன் பிறகு 'அர ஹரோஹரா' என்றுச் சொல்வது வழக்கமாயிற்று என்று ஒரு தகவல் உண்டு. அது மருவி அரோகரா ஆயிற்று

அரோகரா என்ற சொல் மங்களமானது. நேர்க்கணியமானது திட்டுவதற்கும் சபிப்பதற்கும் பயன் படுத்தப்படும் ஒரு சொல் அல்ல. ஆனால் கடந்த புதன்கிழமை கொக்குவிலில் அரோகரா எப்படிப் பயன் படுத்தப்பட்டது? நாடாளுமன்றத்துக்கு அரோகரா...நீதிபதிக்கு அரோகரா...நீதித் துறைக்கு அரோகரா....ஜனாதிபதிக்கு அரோகரா....சிறீலங்காவுக்கு அரோகரா''... என்றால் என்ன பொருள்?

பண்பாட்டு ரீதியிலான சடங்குகளை. மத நம்பிக்கைகளை போராட்டங்களில் இணைப்பது ஓர் உத்தி. அது ஒரு மக்கள் கூட்டத்தை உணர்வுபூர்வமாக இணைப்பதற்கு உதவும். ஈழப்போராட்டத்தின் முதலாவது தெரு நாடகம் விடுதலைக் காளி அது கலையாடிக் குறி சொல்லும் மத நம்பிக்கையை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அரகலயவின் போது சிங்களச் செயற்பாட்டாளர்கள் அவ்வாறான மகத்தான புத்தாக்கத் திறனை வெளிப்படுத்தினார்கள். தமிழ்க் கட்சிகள் அங்கிருந்து கூட எதையும் கற்றுக் கொள்ளவில்லையா? தமிழ்க் கட்சிகளின் கற்பனை வறட்சியை தமிழ் கட்சிகளுடைய அரோகராப் போராட்டம் காட்டியதா?

ஒரு போராட்டத்தில் படைப்புத் திறன் எங்கே வெளிப்படுகிறது என்றால் போராடுபவர்கள் அந்தப் போராட்டத்துக்கு ஆகக் கூடிய பட்சம் உண்மையாகவும் அர்ப்பணிபோடும் இருக்கும் போது தான். மக்களை நேசித்த எல்லாப் போராட்டங்களிலும் படைப்புத்திறன் அற்புதமாக வெளிப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் அதற்கு உதாரணங்களைக் காட்டலாம். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்க் கட்சிகளால் அவ்வாறான படைப்புத் திறனை வெளிப்படுத்த முடியவில்லை. ஏன்?

2009இல் இறுதிக்கட்ட போரின் போது தமிழ்நாட்டில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை இங்கே சுட்டிக் காட்டலாம். அது மிக நீண்டது பிரமாண்டமானது. கொட்டும் மழைக்குள் நனைந்து தோய்ந்த ஆடைகளில் நீர் சொட்டச் சொட்ட மனிதர்கள் சங்கிலிகளாகப் பிணைந்து நின்றார்கள். ஆனால் கடந்த புதன்கிழமை நடந்தது அத்தகையது அல்ல. அது ஓர் அறுந்த சங்கிலிப் போராட்டம். அடுத்ததாக ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடப்போவதாக ஏழு கட்சிகள் கூடி முடிவெடுத்திருக்கின்றன. ஆயின் தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களைத் தான் தெரிந்தெடுக்கிறார்களா?




# இஸ்ரேல் - ஹமாஸ்:- என்ன நடந்து கொண்டிருக்கிறது?

காசா நிலப்பகுதியின் எல்லையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.கடந்த சனிக்கிழமை ஆயுதமேந்திய ஏராளமான ஹமாஸ் இயக்கத்தினர் இந்த வேலியைக் கடந்து இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

தற்போது தங்களது கட்டுப்பாட்டுகள் எல்லைப்பகுதி வந்து விட்டதால், புதிதாக யாரும் வேலியைத் தாண்டி வரவில்லை என்று இஸ்ரேல் கூறியுள்ளது. காஸா மீது தொடர் தாக்குதல் நடத்திய இஸ்ரேல், 200 இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கியதாகக் கூறியுள்ளது.

1500 ஹமாஸ் இயக்கத்தினரின் உடல்கள் இஸ்ரேலுக்குள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஐ.டி.எஃப். எனப்படும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியுள்ளது. இஸ்ரேலின் வான்வெளி தாக்குதலில் இதுவரை நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பதிலடி இப்போது தான் தொடங்கியுள்ளது இஸ்ரேல் பிரதமர்

ஹமாஸின் தாக்குதலுக்கான பதிலடி இப்போது தான் தொடங்கியிருக்கிறது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார். இஸ்ரேலுக்குள் இன்னும் துப்பாக்கியேந்திய பாலஸ்தீனர்கள் இருப்பதாகவும் அவர் கூறினார். காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலியர்களை மீட்பதற்காக எல்லாவற்றையும் செய்யப் போவதாகவும் அவர் கூறியுள்ளார். இஸ்ரேலில் பரந்த கூட்டணி அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக ஹமாஸ் தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையில் காசாவில் சுமார் 1000 இலக்குகளை தாக்கியிருப்பதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை கூறியிருக்கிறது. இஸ்ரேலிய தரப்பில் 900 பேரும் காசாவில் 690 பேரும் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருப்போரை எந்தவிதமான எச்சரிக்கையுமின்றி கொல்லப் போவதாக ஹமாஸ் அறிவித்துள்ளது. ஹமாஸின் தாக்குதலில் காயமடைந்த ஏராளமானோர் கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்றும் இஸ்ரேல் கூறியிருக்கிறது.

இது தங்கள் மீதான செப்டம்பர் 11 தாக்குதல் என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். கடந்த சனிக்கிழமை ஹமாஸ் திடீரென நடத்திய ராக்கெட் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் பதிலடி தாக்குதலைத் நடத்தி வருகிறது.இஸ்ரேல் விமானப்படைகள் காசா மீது குண்டுமழை பொழிகின்றன.

07 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை காலை முதல் இஸ்ரேல் விமானப்படை நடத்தும் தாக்குதல்களில் 1100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரிக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால் 1,23,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் பள்ளிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தப் பதற்றம்



காரணமாக கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கியிருக்கிறது.

### காசாவில் என்ன நிலைமை?

சனிக்கிழமை காலை, ஹமாஸ் ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை இஸ்ரேல் மீது ஏவியது. எல்லை தாண்டிய தாக்குதல்களை நடத்தியதை அடுத்து காசா மக்கள் அதைக் கொண்டாடினர். ஒரு நாள் கழித்து, நிலைமை மிகவும் வித்தியாசமாக இருந்தது. இடைவிடாத இஸ்ரேலிய ராக்கெட் தாக்குதலுக்குப் பிறகு, மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கினர். ஞாயிற்றுக்கிழமை முழுவதும் தாக்குதல்கள் தொடர்ந்தன. சத்தம் பயங்கரமாக இருந்தது. காசா பகுதி முழுவதும் கரும் புகை மேகங்கள் கட்டிடங்களை சூழ்ந்தன.

காசாவில் 1000க்கும் மேற்பட்ட இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இராணுவ நிலைகள், ஹமாஸ் தலைவர்களின் வீடுகள் மற்றும் போராளிக் குழுவால் நடத்தப்படும் வங்கிகள் ஆகியவை இதில் அடங்கும்.

கடந்த 08 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை காலை இஸ்ரேலிய தாக்குதல்களில் ஒன்று, காசாவில் இண்டர்நெட் மையமாகச் செயல்படும் வாடன் கோபுரத்தை குறி வைத்தது. காசாவிற்கு மின்சாரம் வழங்குவதை இஸ்ரேல் நிறுத்தியதால் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் இல்லை. காசாவின் உள்நாட்டு தயாரிப்பு மூலம் 20மூ மின்சாரத்தை மட்டுமே வழங்க முடியும்.

### உணவு - குடிநீர் விநியோகம் துண்டிப்பு

பாலஸ்தீனியர்களுக்கான மருத்துவ உதவி அறக்கட்டளையின் காசா பகுதி இயக்குநர் மஹ்மூத் ஷலாபி, நகரின் முக்கிய மருத்துவமனையை 'படுகொலைக்கூடம்' என்று கூறினார். சவக்கிடங்கில் ஏராளமான உடல்கள் கிடக்கின்றன. மருத்துவமனை ஊழியர்களால் உயிர்கள் போவதைத் தடுக்க முடியவில்லை' என்று அவர் மேலும் கூறினார்.

### இஸ்ரேலுக்குள் இராணுவம் - ஹமாஸ் மோதல்

இஸ்ரேல் எல்லைக்குள் அந்நாட்டு படைகளுக்கும் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கும் இடையே குறைந்தது 22 இடங்களில் துப்பாக்கிச் சண்டைகள் நடந்துள்ளன.

இஸ்ரேல் படைகள் மேற் கொண்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. உரிம், பாரி, நஹல் ஓஸ், நேட்டிவ் ஹதாரா, ஜிகிம் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இது போன்ற மீட்புப் பணிகள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யும் பணிகள் 'நிலைமை மதிப்பீட்டிற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும்' என்று இராணுவம் கூறுகிறது.

இதற்கிடையில், இஸ்ரேலிய அதிகாரிகள் தங்களது நாடு 'இன்னும் போரைத்' தொடர்வதாகக் கூறியுள்ளனர். மேலும் ஹமாஸ் குழுவினரிடம் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களை மீட்கும் நடவடிக்கைகளை இன்னும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக' தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல்களைத் தொடங்கி 24 மணி நேரத்திற்கும் மேலாக நாட்டின் தெற்கு பகுதியில் வசிக்கும் சமூகங்களுக்குள் ஊடுருவிய நிலையில், சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் நடக்கும் இது போன்ற தாக்குதல்கள் குறித்த கூடுதல் விவரங்களைப் பார்ப்போம்.

தெற்கு இஸ்ரேலின் பல பகுதிகளில் இஸ்ரேலிய படைகளுக்கும் பாலஸ்தீன ஆயுதக்குழுவினருக்கும் இடையே மோதல்கள் நடந்து வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாட்டின் தென்பகுதியில் பெரும்பாலான பகுதிகளின் கட்டுப்பாட்டை இஸ்ரேல் ராணுவம் மீட்டுள்ளதாக ராணுவத்தை மேற்கோள் காட்டி ஹாரெட்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் காசா எல்லைக்கு அருகில் உள்ள பீரி மற்றும் ஸ்டெரோட் உள்ளிட்ட பகுதிகளில் சண்டை தொடர்கிறது.

ஜேக் மார்லோ என்ற பிரிட்டிஷ் குடிமகன் காணாமல் போனதை இங்கிலாந்தில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. தாக்குதல் நடந்த போது அவர் காசா எல்லைக்கு அருகிலுள்ள வெளிப்புற நடன விழாவில் பாதுகாப்பு ஊழியராக பணி புரிந்ததாகத் தெரிய வந்துள்ளது.

### இசை விழாவில் 260 பேர் கொல்லப்பட்டனர

இஸ்ரேலில் சுப்பர்நோவா இசை விழாவில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 260 ஆக உயர்ந்துள்ளது என்று உள்ளூர் மீட்பு நிறுவனமான ஜகாவை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் மீதான மிகப்பெரிய திடீர் தாக்குதலின் ஒரு பகுதியாக ஹமாஸால் குறி வைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் சுமார் 3,000 பேர் கலந்து கொண்டனர். காஸா பகுதிக்கு அருகேயுள்ள கிப்புட்ஸ் ரெய்ம் அருகே நெகேவ் பாலைவனத்தில் இந்த விழா நடைபெற்றது. ஆனால் விழா தொடங்கிய சில மணிநேரங்களுக்குப் பிறகு, ஹமாஸ் இயக்கத்தின் இந்த விழாவில் தாக்குதல் நடத்தினர். சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

260க்கும் மேற்பட்ட உடல்கள் திருவிழா தளத்தில் இருந்து மீட்கப்பட்டதாக மீட்பு நிறுவனம் ஜகா தெரிவித்துள்ளது.

### ஹமாஸ் இஸ்ரேல் உளவுத்துறையை ஏமாற்றி தாக்குதல்

ஏற்கெனவே இஸ்ரேலிய நிலைகள் மீது ஹிஸ்புல்லா அமைப்பு நடத்திய சாதாரண பீரங்கி மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேல் மட்டுப்படுத்திய நிலையில், லெபனானின் தெற்கு எல்லையில் உள்ள நிலைமை இப்போது அமைதியாக உள்ளது. ஆனால் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் அச்சுறுத்தல் லெபனான் நாடு முழுவதிலும் பதற்றத்தை அதிகரித்து வருகிறது.

இரானிய ஆதரவு குழுவான ஹிஸ்புல்லா தனது இலக்கை கவனமாக தேர்ந்தெடுத்தது. சர்ச்சைக்குரிய 3 நிலைகளில் மட்டுமே அந்த அமைப்பு தாக்குதல் நடத்தியது. ஆனால், அதை விடப் பெரிய அளவில் அந்த அமைப்பு தாக்குதலை நடத்த முடியும்.

இரானைப் போலவே இஸ்ரேலை அழிக்கத் துடிக்கும் ஹிஸ்புல்லா, ஹமாஸ் குழுவினருக்கு தற்போதைய தாக்குதல் குறித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளது. ஹமாஸ் குழுவின் முன்னேற்றம் குறித்து 'ஆழமாகக் கவனித்து வருவதாகவும்' அந்த அமைப்பு கூறியுள்ளது.

தற்போதைய தாக்குதல்கள் 'பாலஸ்தீன மக்களின் இசைவைப் பெற்றுள்ளது' என்று அதன் அறிக்கை கூறுகிறது. ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவிடம் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் உள்ளன. அவை இஸ்ரேலிய எல்லைக்குள் ஆழமாகச் சென்று தாக்கக் கூடியவை.(20ம் பக்கம் பார்க்க)

# காலிஸ்தானியர்களை ஈழத்தமிழர்கள் ஆதரிக்கலாமா?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி தொடர்கின்றது. கடந்த யூன் மாதம், காலிஸ்தான் பிரிவினையை வலியுறுத்தி செயற்பட்டு வரும் சீக்கிய தலைவரான ஹர்தீப் சிங்க நிஜார் என்பவர், கனடாவில் வைத்து கொல்லப்பட்டிருந்தார். இதற்கு பின்னால் இந்திய முகவர் செயற்பட்டிருப்பதற்கான நம்பகமான குற்றச் சாட்டுக்கள் இருப்பதாக, கனடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, கனடிய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தியாவிற்கான கனடிய தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவரையும் கனடா வெளியேற்றிருந்தது. இதற்கு பதிலடியாக, கனடாவின் இந்தியாவிற்கான அதிகாரியொருவரை இந்தியா வெளியேற்றியிருந்து. கனடிய பிரதமரின் இந்த கருத்தை, அபத்தமென்றும், உள்நோக்கம் கொண்ட குற்றச் சாட்டென்றும், இந்தியா பதிலளித்திருந்தது.

தற்போது படுகொலை செய்யப்பட்டிருக்கும் நபர் பிரதிநிதித்துவப்படும் டைகர் போஸ் எனப்படும் காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பு, இந்தியாவினால் பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டிருக்கின்றது. படுகொலை செய்யப்பட்ட ஹர்தீப்சிங், இந்தியாவினால் தேடப்பட்டு வரும் ஒரு குற்றவாளி. அவரது தலைக்கு, பத்து கோடிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த ஹர்தீப்ரிங்க, 2012இல், பாகிஸ்தானுக்கு சென்று, அங்குள்ள இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பொன்றிடம் ஆயுதப் பயிற்சிகளை பெற்றிருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன. வெடி குண்டுகளை கையாளும் பயற்சிகளையும் குறித்த நபர் பெற்றிருக்கின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில் இவரது கொலைக்குப் பின்னால் பாகிஸ்தானிய வெளிய உளவுத்துறை அமைப்பான, ஐ.எஸ்.ஐ அமைப்பு இருக்கலாமென்றும், புலனாய்வு தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்தியாவில் சீக்கியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற, பஞ்சாப் மாநிலத்தை அடிப்படையாகக் கொண்டு, சீக்கியர்களுக்கான தனிநாட்டு கோரிக்கையை முன் வைப்பவர்களே, காலிஸ்தான் அமைப்பினராக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னரே இவ்வாறான கோரிக்கை மேலேழுந்தது. 1940களில் தான் முதல் முதலாக காலிஸ்தான் என்னும் பெயர் வெளியானது.

காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து பல்வேறு நகர்வுகளை காலிஸ்தானிய வாதிகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். இந்தியாவில் மானில ஆட்சி முறைமை அறிமுகமான பின்னர் தனிநாட்டை கோருவதற்கான தேவைகள் அங்கில்லை.

இவ்வாறான தனிநாட்டு கோரிக்கைகள் எதிர்காலத்தில் எழலாம் என்பதை கணித்தே, இந்திய ஆட்சியாளர்கள், மானில ஆட்சி முறைமையை ஏற்படுத்தினர். ஆனாலும் சீக்கியர்களுக்கான தனிநாட்டு கோரிக்கையை முன் வைத்து, இந்தியாவிற்கு வெளியில் சீக்கிய பிரிவினைவாத குழுவினர், ஐரோப்பிய நாடுகளில் செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக இவர்களது செயற்பாடுகள் கனடாவில் தீவிரமாக இருக்கின்றது. இந்த பின்புலத்தில் தான் கனடா தொடர்பில், இந்தியா தொடர்ந்தும் குற்றச் சாட்டுக்களை முன் வைத்து வருகின்றது. இங்கு பலரும் கவனிக்கத் தவறுகின்ற விடயமொன்றுண்டு. அதாவது, காலிஸ்தான் கோரிக்கையை வலுப்படுத்துவதில் பாக்கிஸ்தானின் மறை கரமுண்டு. 1971 இல் பாக்கிஸ்தான் - இந்திய யுத்தத்தை தொடர்ந்து, சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஜெகஜித் சிங், பாக்கிஸ்தான் பிரதமர், பூட்டோவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். இதன் போது, காலிஸ்தான் கோரிக்கைக்கு உதவி வழங்குவதாக பூட்டோ தெரிவித்திருந்தார். கிழக்கு பாக்கிஸ்தானின் உடைவுக்கு பின்னால் இந்தியா இருந்தமைக்கு, பழிவாங்கும் நோக்கில், இந்தியாவில் பிரிவினை கோரிக்கையை தூண்டும் செயற்பாடுகளுக்கு பாக்கிஸ்தான் வெளியக உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ செயற்பட்டுவருகின்றது.

இந்தப் பின்புலத்தில் தான், வெளிநாடுகளில் இயங்கும் காலிஸ்தான் பிரிவினை வாதிகளுக்கு பின்னால் பாக்கியஸ்தான் உளவுத்துறை திரைமறைவில் செயற்பட்டு வருவதான குற்றச்சாட்டுக்கள்



நீண்ட காலமாக முன் வைக்கப்பட்டு வருகின்றது. இன்வாறானதொரு பின்புலத்தில் தான், கனடாவை தளமாகக் கொண்டிருக்கும் காலிஸ்தான் அமைப்பினர் பாக்கிஸ்தானுடன் தொடர்பிலிருந்திருக்கின்றனர்.

2018இல், காலிஸ்தான் ஆயுததாரிகள் சிலர் பஞ்சாப்பில் கைது செய்யப்பட்டனர். இந்த தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பின்னால் பாக்கிஸ்தானிய உளவுத்துறை இருந்தாக, பஞ்சாப் மானில முதலமைச்சர் அப்போது, குற்றம் சாட்டியிருந்தார்.

காலிஸ்தான் பிரிவினைவாத செயற்பாடுகளுக்கான, ஒரு கூடாரமாக, கனடா பயன்படுத்து வருவது தொடர்பில் ,ந்தியா பல்வேறு சந்தர்பங்களில் கனடாவை எச்சரித்திருக்கின்றது. ஆனால், கருத்துச் சுதந்திரம் என்னுமடிப்படையில் கனடா பதிலளித்து வருகின்றது. அண்மையில் முன்னாள் இந்திய பிரதமர் இந்திராகாந்தியின் கொலையை கொண்டாடும் வகையில் கனடிய காலிஸ்தான் பிரிவினைவாதிகள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறான செயற்பாடுகளை, கருத்துச் சுதந்திரம் என்னும் வகையில், கனடா அவற்றை நியாயப்படுத்தி வருகின்றது. ஆனால் மறுபுறம் இந்தியாவிற்கோ, இவ்வாறான விடயங்கள் இந்தியாவிற்குள் வன்முறையை ஊக்குவிக்கும் தேசிய பாதுகாப்பு விவகாரமாரும். இந்த அடிப்படையில் இந்தியாவிற்கும் கனடாவிற்குமிடையில் நீண்டகாலமாக முரண்பாடுகள் காணப்படுகின்றன. கனடிய பிரதமர் ஹாப்பர், இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது, அப்போதைய வெளிவிவகார அமைச்சரினால் இந்த விடயம் சுட்டிக் காட்டிப்பட்டிருந்தது.

அண்மையில் ஜஸ்டின் ரூடோ, ஜ.20 மகா நாட்டிற்காக இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போதும், பிரதமர் மோடிஇந்த விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கின்றார். தற்போது, இந்த முரண்பாடுகள் வெளிப்படையான இராஜதந்திர நெருக்கடியாக மாறியிருக்கின்றது. ஏற்கனவே சீனா தங்களின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதாக குற்றம் சாட்டி வரும் கனடா, தற்போது, இந்தியாவின் மீதும் அவ்வாறான குற்றச் சாட்டை முன் வைக்கின்றது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நபர்களை வெளிநாடுகளில் அழிக்கும் கொள்கை நிலைப்பாட்டை இதுவரையில் இந்தியா வெளிக் காட்டியதில்லை. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய உளவுத்துறைகளே அவ்வாறனை வழிமுறையை பின்பற்றி வருகின்றன.

காலிஸ்தான் தொடர்பில் நாம் எதற்காக சிந்திக்க வேண்டுமென்னும் கேள்வி எழலாம். சிலர் இது பற்றி அரைகுறை அறிவுடன் உளற முற்படுவதால் தான், இந்த விடயம் தொடர்பில் சில விடயங்களை வலியுறுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. காலிஸ்தானியர்கள் விடுதலைக்காக போராடும் மக்கள் கூட்டம், அவர்களை ஆதரிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எங்களுக்குண்டு என்றவாறான கதைகளை சிலர் கூற முற்படுகின்றனர்.

இது மிகவும் ஆபத்தானது. இது ஒரு அடிப்படை அறிவற்ற செயற்பாடு. இந்தியாவிற்குள் பிரிவினையை கோரும் காலிஸ்தானிய குழுக்கள் மற்றும் காஸ்மீரிய தீவிரவாதக் குழுக்கள் அனைத்துமே, பாக்கிஸ்தானிய செல்வாக்கிற்குட்பட்டவை. இந்தியாவை எவ்வாறாயினும் உடைக்க வேண்டும் என்பதே இதற்கு பின்னாலுள்ள இரகசிய நிகழ்சிநிரல். இதனை ஒரு ஈழத் தமிழர் ஆதரிக்கின்றார் என்றால், அவர் இந்தியாவிற்கு எதிராக செயற்படுகின்றார் என்பதே பொருளாகும். இது எந்தவகையிலும் ஈழத் தமிழர் நலன்களுடன் தொடர்புபட்டதல்ல மாறாக, ஈழத் தமிழ் மக்களின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானது. ஆயுத விடுதலைப் போராட்டங்கள் இயங்கிய காலத்தில், ஈழத்தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில், ஒரு வாதம் மேலோங்கியிருந்தது.

அதாவது, விடுதலைக்காக போராடும் நாங்கள் உலகெங்கும் விடுதலைக்காக போராடும் ஏனைய அமைப்புக்களை ஆதரிக்க வேண்டும். அவர்களுடனான உறவை பலப்படுத்த வேண்டும். இந்தக் கருத்து ஏறக்குறைய அனைத்து இயங்கங்களின் மத்தியிலும் வேரூன்றியிருந்தது. இந்தப் பின்புலத்தில் தான் பாலஸ்தீனிய விடுதலை அமைப்புடன் ஈழத்து அமைப்புக்கள் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. ஆரம்ப காலத்தில் பாலஸ்தீனிய அமைப்பிடமிருந்து ஈழத்து ஆயுத அமைப்பின் உறுப்பினர்கள் பயிற்சிகளையும் பெற்றிருந்தனர். அதே போன்று, இந்தியாவில் செயற்பட்டு வந்த இடதுசாரி தீவிரவாத அமைப்புக்களுடனும் தமிழ் இயங்கங்கள் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இவ்வாறு புரட்சிகர இயங்கங்கனோடு தொடர்புகளை ஏற்படுத்த முற்பட்ட அனைத்து ஈழத்து இயக்கங்களும், இறுதியில் இந்திய அரசின் பயிற்சிகளை பெற்றே தங்களை பலப்படுத்திக் கொண்டன. அப்போதே, ஈழத்து ஆயுத இயங்கங்களின் புரட்சிகர அரசியல் நிலைப்பாடு தோல்வியடைந்துவிட்டது. அவ்வாறான நிலைப்பாட்டால் ஒரு கட்டத்திற்கு மேல் ஒரு ஆயுத இயக்கம் வளர்சியுற முடியாதென்பது, அன்றைய சூழலிலேயே நிரூபணமாகிவிட்டது. அப்போதே காலாவதியாகிப் போன விடயத்தை இப்போது சிலர் விளக்கமில்லாது உச்சரிக்க முற்படுகின்றனர். ஒரு புலம்பெயர் தமிழ் ஊடகம் .அதன் அறியாமையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

காலிஸ்தான் பிரிவினைவாத செயற்பாடுகளை ஈழத் தமிழர்கள் எதிர்த்து நிற்க வேண்டும். அதன் பக்கமே ஈழத்தவர்கள் செல்லக் கூடாது. அவ்வாறான முயற்சிகள், போருக்கு பின்னர், தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்ற ஈழத் தமிழ் மக்களை மேலும் அழிவின் பாதைக்கே கொண்டு செல்லும்.

புலம் பெயர் சூழலிலுள்ளவர்கள் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும். ஒடுக்குமுறையிலிருந்து விடுபடு வேண்டுமென்று எண்ணுபவர்கள், இன்னொரு சூழலில் இயங்குபவர்களோடு, உறவுகளை ஏற்டுத்திக் கொள்ள வேண்டுமென்னும் அரசியல் அணுமுறையானது, எப்போதோ காலாவதியா விட்டது.

அதிகாரத்தை கோரும் ஒவ்வொரு பாதிக்கப் பட்ட மக்கள் கூட்டமும் பலம் பொருந்திய நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்வதிலேயே அவர்களது வெற்றி தங்கியிருக்கின்றது. இது தான் இன்றைய அரசியல் ஒழுங்காகும்.

இதனை புரிந்து கொள்ள முடிந்தால் எந்தவொரு விடயம் தொடர்பிலும் தடுமாற வேண்டியதில்லை. ஈழத்தமிழர்களுக்குத் தேவை இந்தியாவின் ஆசீர்வாதமே தவிர, இந்தியாவின் எதிரிகளுடையதல்ல.

காலிஸ்தானியர்கள் அடிப்படையிலேயே ஈழத் தமிழர் நலன்களுக்கு முற்றிலும் எதிரானவர்கள். அது ஒரு பாகிஸ்தானிய நிகழ்சிநிரல். காலிஸ்தானியர்களை விடுதலைக்காக போராடுபவர்கள் என்று கூறிக் கொள்வது, அடிப்படையிலேயே ஒரு முட்டாள்தனமாகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகையை eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்

# சீனா வசமாகும் இந்தோ பசுபிக் தீவுகள்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்த போது, நகைப்புடன் கேள்விக்குட்படுத்திய இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள தீவுகளை குறி வைத்துக் கொண்டிருக்கும் சீனா, இன்னும் ஒரு படி முன்னே நகர்ந்திருக்கிறது.

மாலைதீவில் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவும், கிழக்கு திமோருடன் நெருங்கிச் சென்றிருப்பதும், பெய்ஜிங்கின் கடலாதிக்க விரிவாக்க முயற்சிகளுக்கு பலம் சேர்ப்பதாக உள்ளது.

அதேவேளை தீவுகளைக் குறி வைக்கும் சீனாவுக்கு சாதகமாக மாறி வரும் சூழ்நிலைகள், அமெரிக்கா, இந்தியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் மத்தியில் கவலைகளை அதிகப்படுத்தியிருக்கிறது.

மாலைதீவில் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலில் முதல் சுற்றில் முடிவு கிடைக்காத நிலையில், இரண்டாவது சுற்றில் கிட்டத்தட்ட 54 சதவீத வாக்குகளுடன் வெற்றியைப் பெற்றிருக்கிறார் எதிர்க்கட்சி வேட்பாளர் மொஹம்மட் முஇஸ்ஸு.

சீனாவுடன் மிக நெருக்கமாக செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீன், ஊழல் மோசடிக் குற்றச் சாட்டில் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் நிலையில் அவரது கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட மொஹம்மட் முஇஸ்ஸு வெற்றி பெற்றிருக்கிறார். சீன சார்பு வேட் பாளரான இவர், ஆட்சியில் இருந்த இந்திய சார்பு ஜனாதிபதியான இப்ராஹிம் சோலிஹ்வை தோற்கடிப்பதற்கு முக்கியமாக பயன்படுத்தியது, 'இந்தியா வெளியே போ' என்ற கோஷத்தை தான்.

இப்ராஹிம் யாமீன் 2013இல் ஆட்சிக்கு வந்த பின்னர், இந்தியாவின் நலன்கள், திட்டங்கள் கைவிடப்பட்டு, சீனாவுடன் நெருக்கம் ஏற்பட்டது. அது இந்தியாவுக்கு பெரும் பூ கோள அரசியல் பாதிப்புகளை ஏற்படுத்தியது.

அதனால் தான், 2018 இல் அங்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் இந்தியா உறுதியாக இருந்தது. அதன் பின்னர், இந்தியா பல்வேறு பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்ததுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பையும் வலுப்படுத்தி, சீனாவை ஓரம் கட்டியது. ஆனாலும் இந்த ஜனாதிபதி தேர்தல் முடிவு இந்தியாவுக்கு பாதகமாகவே அமைந்திருக்கிறது.

இதில் வெற்றி பெற்ற, மொஹம்மட்முஇஸ்ஸு, மாலைதீவில் உள்ள வெளிநாட்டுப் படைகளை வெளியேற்றுவோம் என்று உறுதியாக கூறியிருக்கிறார். அங்கு குறைந்தது 75 இந்தியப் படையினர் இருக்கின்றனர். அவர்களை வெளியேற்ற புதிய ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை, இந்தியாவுக்கு சாதகமற்ற சூழல் மாலைதீவில் உருவாகி வருவதைக் காட்டுகிறது.

உடனடியாக இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாது போனாலும், இந்தியத் திட்டங்களை புறக்கணிக்கும் முடிவுகளை எடுக்காது போனாலும், அடுத்த 5 ஆண்டுகள் இந்தியாவுக்கு சவாலானதாக இருக்கும் என்றே கருதப்படுகிறது.

மாலைதீவிலும் இலங்கையிலும் அண்மையில் மாறி மாறி நடக்கும் ஆட்சி மாற்றங்கள், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் சுழற்சி முறையிலான பலனையே கொடுத்து வருகின்றன.

ராஜபக்ஷவினர் ஆட்சிக்கு வரும் போது சீனா கொண்டாடுவதும், இந்தியா விலகி நிற்பதும், எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் போது இந்தியா அருகே வருவதும், சீனா எட்டிப் போவதுமான சூழல் தான் இலங்கையில் காணப்படுகிறது.

இலங்கையில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவி விலகி, ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னர், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு போட்டி உருவாகியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஓடிக் களைத்து விட்டது என்றே கூறலாம்.

சீன ஆய்வுக் கப்பல்கள் அல்லது உளவுக் கப்பல்களின் வருகை தொடர்பாக நிலவி வருகின்ற இழுபறி ஆகப்பிந்திய சர்ச்சையாக தொடர்கிறது. இலங்கைக்கு சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் வருவதையோ, தரித்து நிற்பதையோ, ஆய்வுகளில் ஈடுபடுவதையோ இந்தியா விரும்பவில்லை. அவற்றை தமது பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாக பார்க்கிறது இந்தியா. ஆனால் சீனாவோ, கடல்சார் ஆய்வு, நீரியல் ஆய்வு என்பன போன்ற வழிகளில் மூக்கை நுழைத்துக் கொண்டு, இலங்கைக்கு வர அல்லது இலங்கைக்கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறது. இந்த விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது முடியாத காரியம் என்பது ஏலவே தெரிந்த விடயம் தான்.

ஆனாலும் தற்போதைக்கு இந்த விவகாரத்தைக் கையாளுவதில் இலங்கை அரசாங்கம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. ஒரு பக்கம் சீனா இன்னொரு பக்கம், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

அண்மையில், அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க, ஜப்பானிய உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்த போது, 'உங்களின் பூகோள அரசியல் கரிசனைகள் குறித்து மட்டும் எங்களுடன் பேசுங்கள், மூன்றாவது நாடு குறித்து பேச வேண்டாம் என்று திட்டவட்டமாக கூறியிருந்தார்' என செய்திகள் வெளியாகின.

அவர் அவ்வாறு குறிப்பிட்டது உண்மையானதாக இருந்தால் சீனாவை மையப்படுத்தி இப்போது நடந்து கொண்டிருக்கும் கயிறிழுப்பு தான் அதற்குக் காரணம் எனக் கருதலாம்.

முன்னதாக ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க, நியுயூயோர்க்கில் உரையாற்றிய போது, இலங்கையில் எந்த உளவுக் கப்பலும் இல்லை என்றும் ஆய்வுக் கப்பல்கள் தான் வருகின்றன என்றும் கூறியிருந்தார். அத்துடன் இந்தோ—பசுபிக்கை கற்பனையான எல்லைக்கோடு என்றும், ஆக்கஸ் கூட்டை இராணுவக் கூட்டணி என்று குறிப்பிட்டிருந்தார்.

இவையெல்லாம் இலங்கையின் மீதான சீன செல்வாக்கின் பிரதிபலிப்பாகவே பார்க்கப் பட்டது. சீனாவின் ஆய்வுக் கப்பல்களை உளவுத் தகவல்களை சேகரிக்கும் கப்பல் என்கிறது இந்தியா. ஆனால், இலங்கை அரசாங்கமோ சீன கப்பல்கள் இலங்கையில் புலனாய்வு தகவல் சேகரிப்பில் ஈடுபடவில்லை என்று அடித்துக் கூறுகிறது.

இந்த இழுபறிகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில் தான், மாலைதீவில் ஆட்சி மாற்றம் உறுதியாகியிருக்கிறது.

அது சீனாவுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் செய்தியாகவும் இந்தியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் செய்தியாகவும் அமைந்திருக்கிறது. மாலைதீவில் கடந்த செப்டெம்பர் 30ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்து, 1ஆம் திகதியே முடிவுகள் அறிவிக்கப்பட்ட போதும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தி, 4ஆம் திகதி தான் மொஹம்மட் முஇஸ்ஸுவிடம் கையளிக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் வாழ்த்து தெரிவிக்க ஏற்பட்ட தாமதமே இந்தியாவுக்கு ஏற்பட்ட பின்னடைவை வெளிப்படுத்தியிருக்கிறது. இன்னொரு பக்கம், இந்தோனேஷியாவிடம் இருந்து 2002இல் விடுதலை பெற்ற கிழக்கு திமோருடன் (திமோர் லெஸ்தே) சீனா நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், கிழக்கு திமோர் பிரதமர் சனானா குஸ்மாவோவைச் சந்தித்த போது, இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு திமோரில் இருந்து 700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காரணம், ஏற்கனவே, அவுஸ்திரேலியாவுக்கு வட கிழக்காக 2,000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள, சொலமன் தீவுகளுடன் கடந்த ஆண்டு சீனா பாதுகாப்பு உடன்பாட்டை செய்திருக்கிறது.அது அவுஸ்ரேலியாவுக்கு பலத்த சவாலாக அமைந்திருக்கிறது. அங்கு சீனா கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கலாம் என ஊகங்கள் நிலவுகின்றன. அது போல, பசுபிக் தீவுகளில் ஒன்றான வனோட்டுவில், இரண்டாம் உலகப் போர் காலத்தில் அமெரிக்கா பயன்படுத்திய விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் உடன்பாடு ஒன்றில் சீனா கடந்த மே மாதம் கையெழுத்திட்டிருக்கிறது.

மற்றொரு பசுபிக் தீவுக் கூட்டமான கிரிபாட்டி அரசாங்கத்துடனும் சீனா பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

சொலமன்தீவு, அல்லது வனுவாட்டு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் சீனா தளம் அமைக்குமானால், தெற்கு பசுபிக் பிராந்தியத்தில் தற்போது காணப்படும் வலுச் சமநிலை மாற்றமடையும் என்று அவுஸ்திரேலிய பாதுகாப்பு நிபுணர்கள் ஏற்கனவே மதிப்பீடு செய்திருக்கிறார்கள்.

சீனா ஒரு பக்கம் தனது கடற்படையை கண்மூடித்தனமாக வளர்த்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை, இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தீவு நாடுகளை வளைத்துப் போட்டு தனக்குச் சாதகமான நிலையை உருவாக்குவது தொடக்கம் தளம் அமைப்பது வரை முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

எவ்வாறாயினும் கிழக்கு திமோருடன் சீனா நெருக்கத்தை ஏற்படுத்தவுள்ள போதும், சீன ஜனாதிபதியுடன் தமது பிரதமர் நடத்திய பேச்சுக்களில் இராணுவ ஒத்துழைப்புகள் குறித்துப் பேசப்படவில்லை என்று, கிழக்கு திமோர் ஜனாதிபதி ராமோஸ் ஹோர்தா தெரிவித்திருக்கிறார்.

இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேஷியா போன்ற அண்டை நாடுகள் அமைதியாக உறங்கலாம் என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், கிழக்கு திமோர், சொலமன் தீவுகள், வனுவாட்டு, கிரிபாட்டி ஆகியவற்றுடனும், இலங்கை மாலைதீவு போன்ற நாடுகளுடனும் சீனா கையாளும்,

(22ம் பக்கம் பார்க்க)





# கனடா - இந்தியா இராஜதந்திர முறுகலும் இலங்கையின் போக்கும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– T.K.கணேசலிங்கம் –



இலங்கையின் அரசியல் முழுவதும் பிராந்திய உலகளாவிய தளத்தைக் கருத்தில் கொண்டு இயங்குவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக் கூடாகவே உலகத்தையும், பிராந்தியத்தையும் கையாளும் போக்கைக் கொண்டுள்ளது. அத்தகைய கொள்கைகள் அனைத்தும் சிங்கள பெரும்பான்மைத் தேசியத்தை கருத்தில் கொண்டதாகவே அமைந்துள்ளது. அது ஏனைய தேசியங்களுக்கு எதிரானதாகவே தெரிகிறது. இதனையே பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட இத்தகைய செய் முறையானது அரச கட்டுமானத்திற்கான தன்மையாகவும் தேசிய அரச கட்டுமானத்திற்கான அடிப் படையற்ற வடிவமெனவும் குறிப்பிடுகின்றார்.

இலங்கை ஆட்சியாளர்கள் இலங்கைத் தேசியத்தை கட்டுவதற்கு மாறாக இலங்கை அரசை மட்டுமே கட்டுபவர்களாக விளங்குகின்றனர். அது சிங்களத் தேசியமாகவே கருத்துருவாக்கம் செய்யப்பட்டது. ஆனால் தற்போது அத்தகைய சிங்கள பெரும்பான்மைத் தேசியத்திற்கும் விரோதமான செயல்பாடுகளை ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இது கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு மீதான போரினால் மறைக்கப்பட்டிருந்ததே அன்றி அடிப்படையில் சிங்கள சமானியனுக்கு விரோதமான அரசாகவே ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒன்றாகவே தற்போதைய புதிய கனடா நாட்டு அதிகாரியை 5 நாட்கள் அவகாசத்தில் வெளியேறுமாறு இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. இதனிடையே கனடாவில் வசிக்கும் இந்துக்கள் கனடாவை விட்டு வெளியேற வேண்டுமென சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.



இதே நேரம் 2017 இல் போலிக் கடவுச் சீட்டு மூலம் பஞ்சாப்பிலிருந்து தப்பிச் சென்ற காலிஸ்த்தான் பிரிவினைவாதியான சுந்தூல் சிங் 21.09.2023 சுட்டுக் கொல்லப் பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆரம்பத்தில் குழுக்களுக்கிடையிலான மோதலாக கருதப்பட்டாலும் தற்போது இந்திய அரச அதிகாரிகளில் நடவடிக்கை என்றே உரையாடப்படுகிறது. இதே நேரம் கனேடிய பாதுகாப்பு அமைச்சு இந்தியா இந்தியா இலங்கைத்தீவு சார்ந்து தனது புவிசார் அரபியலை கருத்தில் கொண்டும் செயல்படுகிறது. இலங்கைத்தீவை ,ந்தியா தனது கொல்லைப்புற (Backyard State) அரசாகவே வைத்துக் கொள்ள முனைகிறது. அதற்காகவே அதீதமான ஒத்துழைப்பினை வழங்கி வருகிறது. அரசியல் பொருளாதார, இராணுவ ஒத்துழைப்புக்களை எல்லைலயின்றி வழங்குவதில் இந்தியா கொண்டுள்ள கரிசனை முதன்மையானது. இலங்கைத் தீவின் ஆயுதப் போராட்டத்தை முடிபுக்கு கொண்டு வருவதிலும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும், பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதிலும் இந்தியாவின் அக்கறை அனைத்தும் தனது கொல்லைப்புறம் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் அமைய வேண்டும் என்பதேயாகும். ஆனால் அது ஆரோக்கியமாக இருக்கிறதா என்பது கேள்விக்குரியதே. இலங்கை ஆட்சியாளர்கள் இத்தகைய உரையாடல் மூலம் இந்தியாவை கையாளுவதாகவே கருதுகின்றனர். சிவ சந்தர்ப்பங்களில் அத்தகைய கையாளுகை நிகழ்ந்து விடுகிறது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். காரணம் இந்தியக் கொள்கை வகுப் பாளர்களும் ஆட்சியாளர்களும் இலங்கையின் உத்திகளை எதிர் கொள்ளாது இசைந்து பயணிக்கும் நிலை காணப் படுகிறது. அத்தகைய நகர்வு நிரந்தரமானதாக அமைய வாய்புள்ளது என கூறி விட முடியாது. இந்தியாவின் போக்கிலும் மாற்றங்கள் அதிகமானதாக காணப்படுகிறது. சீனாவின் பட்டி மற்றும் பாதை முன் முயற்சிக்கு பதிலாக பொருளாதார கொரிடோர் (Economical Corridor) ஒன்றினை மேற்காசியா ஊடாக ஐரோப்பாவுடன் ஏற்படுத்த புதுடில்லி ஜி-20 மகாநாடு திட்டமிட்டுள்ளது. அவ்வாறே தென்னாசியாவுக்குள் இயங்கிய இந்தியப் புலனாய்வுத் துறையானது கண்டங்களைக் கடந்து கனடா வரையும் நகர்ந்துள்ளதாக விமர்சனங்கள் முன் வைக்கப்படுகிறது. அப்படியாயின் இந்தியா உலகளாவிய அரசியல் பொருளாதாரத்தில் மட்டுமல்ல புலனாய் விலும் இராணுவத்திலும் நகர்வை மேற் கொள்ள திட்டமிடுவதாகவே தெரிகிறது.



இது தென்னாசியப் பிராந்திய நாடுகளுக்கும் உரிய எச்சரிக்கையாகவே தெரிகிறது. இவ்வாறு இந்தியா பிராந்திய ரீதியில் தனது புலனாய்வுத் துறையை முதன்மைப்படுத்தி செயல்பட்டதென்பதை ஜே.என். டிக்சித் தனது Assignment Colombo என்ற (21ம் பக்கம் பார்க்க)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலமும், சமூக வலைத்தளங்களுக்கு எதிரான சட்ட வரைபின் முன்மொழிவுமாக உள்ளது.

இக்கட்டுரை இலங்கை ஆட்சியாளர்களது இந்திய ஆதரவையும் கனேடிய எதிர்ப்புணர்வையும் அதன் உள்ளார்ந்த அரசியலையும் தேடுவதாக உள்ளது.

இந்தியா-கனடா விவகாரத்தில் இலங்கை இந்தியாவுக்கு ஆதரவளிக்கும். சீக்கிய பிரிவினைவாதி கனடாவில் சுட்டுக் கொல் லப்பட்டமையின் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என்று கனடா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு இந்தியா வழங்கியுள்ள பதில் உறுதியானது.

நாங்கள் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம் பயங்கரவாதம் குறித்து சிறிதளவு கூட சகிப்புத் தன்மையை வெளிப்படுத்தக் கூடாது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். இலங்கையைப் போன்றே தற்போது எந்தவித ஆதாரமும் இன்றி சில குற்றச் சாட்டுக்களை இந்தியா மீது கனடா முன் வைத்துள்ளது. பயங்கரவாதிகள் சிலர் கனடாவில் பாதுகாப்பான புகலிடத்தை கண்டு பிடித்துள்ளனர். கனேடியப் பிரதமர் எந்தவித ஆதாரமும் இன்றி சில மூர்க்கத் தனமான குற்றச் சாட்டுக்களை இந்தியா மீது முன்வைத்துள்ளார்.

இலங்கைக்கும் கனடா இதே விதமான விடயத்தை செய்துள்ளது எனவும் இலங்கையில் ,னப்படுகொலை இடம் பெற்றதாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பான விடயம் எனவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜீன் மாதம் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் நிஜ்ஜார் கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இந்தியாவால் தேடப்படும் பிரிவினைவாதி எனவும் இந்தியாவிலிருந்து தப்பி கனடாவில் குடியேறிவர். இந்த கொலையுடன் இந்திய அரச முகவர்களின் தலையீடு உள்ளதாக கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பாராளுமன்றத்தில் இந்தியா தொடர்பில் குற்றச்சாட்டை முன் வைத்திருந்தார்.

இத்தகைய குற்றச்சாட்டை அடுத்து கனடா இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரியை வெளியேறுமாறு கனடா உத்தரவிட்டது. பதிலுக்கு இந்தியாவும் வுடனான உறவு கனடாவுக்கு அவசியமானதென தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் கனடாவும் இராஜதந்திர முறுகலை சரி செய்ய அதிக முனைப்புச் செலுத்தி வரும் சந்தர்ப்பத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் முண்டியடித்துக் கொண்டு இந்தியாவை ஆதரிப்பதென்பது அடிப்படையில் கனடா மீதான வெறுப்புணர்வேயாகும்.

காரணம் கனடா இலங்கைக்கு எதிராக ஈழத்தமிழருக்கு சார்பாக குற்றச் சாட்டுக்களை முன் வைத்திருந்தமை அனைவரும் தெரிந்த விடயமே. அத்தகைய குற்றச் சாட்டானது இலங்கையில் ஈழத் தமிழருக்கு எதிராக நிகழ்ந்த இனப்படுகொலை எனவும் அதற்கு எதிராக இலங்கை தண்டிக்கப்பட வேண்டும் என்பதையும் முதன்மைப்படுத்தியிருந்தது. அதனையும் கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை இலங்கை-கனடிய இராஜதந்திர மட்டத்தில் அதிக முரண்பாட்டை ஏற்படுத்தியது. அதனால் அத்தகைய குற்றச் சாட்டை எதிர் கொள்ள வேண்டிய சூழலைக் கருத்தில் கொண்டே ,லங்கை ஆட்சியாளர்கள் செயல்படுகின்றனர். எதிர் காலத்தில் இலங்கை மீதான இனப்படு கொலைக் குற்றச் சாட்டு முன் வைக்கும் போது அதனை இந்தியாவுடன் சேர்ந்து முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கை மட்டுமல்ல ஈழத்தமிழருக்கு சாதமாக இந்தியா நகர்ந்து விடக் கூடாது என்பதிலும் தென் இலங்கை ஆட்சியாளர்கள் கவனமாக செயல்படுகின்றனர்.

கனேடிய -இந்திய உறவு ஆரோக்கியமானதாக அமையுமாயின் எதிர் காலத்தில் இலங்கை ஆட்சியாளர் மீதான குற்றச் சாட்டு இலகுவாக சத்தியமாகியிடும் என்ற அச்ச உணர்வு காணப்படுகிறது. தென் இலங்கை ஆட்சியாளர்கள் கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு நிரந்தரமாகவே முறிவடைய வேண்டுமென கருதுகின்றனர். அதற்கான வாய்ப்புக்களாகவே தற்போதைய முரண்பாட்டை கூர்மைப்படுத்துகின்றனர்.

அது மட்டுமன்றி இந்தியாவுடன் செயல்படுவதென்பது இலங்கைதீவில் ஆபத்துக்கள் அனைத்தையும் இந்தியா கவனத்தில் கொண்டு தீர்வு எட்டும் என்ற நீண்ட தூர நோக்குடனாகும்.



# இஸ்ரேல் - ஹமாஸ்:- என்ன நடந்து கொண்டிருக்கிறது?

(16ம் பக்கத் தொடர்ச்சி) ஏவுதளம் மற்றும் பிற தளங்களை குறி வைத்து உடனடியாக பதிலடி கொடுத்த இஸ்ரேல், ஏற்கனவே தனது வடக்கு எல்லைக்கு வலுவான ராணுவ குழுக்களை அனுப்பியுள்ளது. அது ஒரு நீண்ட மோதலைத் திட்டமிடுவதாகவும், காஸாவில் தரைவழித் தாக்குதலை நடத்த முடிவெடுத்திருப்பதாகவும் கூறுகிறது.

தற்போதைய தாக்குதல்களின் அளவு வரம்பிற்குட்பட்டது. இரு தரப்பினரும் தங்கள் தாக்குதல்களை கவனமாக அளவீடு செய்து மேற்கொள்கின்றனர். மேலும் முழு அளவிலான போரைத் தூண்டும் காரணிகளும் மிகவும் குறைவாகவே உள்ளன. ஆனால் ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகளில் உள்ள மறைமுகமான அச்சுறுத்தல், இதே நிலை நீடிப்பதற்குப் பதிலாக நிலைமை மோசடையும் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது. மேலும் ஹிஸ்புல்லா அமைப்பு என்பது லெபனான் நாடு அல்ல. அந்த அமைப்பை எதிர்க்கும் பலர் நாட்டில் உள்ளனர். இன்னும் அரசியல் முடக்கத்தால் அந்த அமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது - தற்போதைய நிலையில் அந்த அமைப்புக்கு சரியான தலைமையும் இல்லை என்பதுடன் கடும் பொருளாதார நெருக்கடியில் அந்த அமைப்பு சிக்கித் தவிக்கிறது.

### காசாவில் உள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர்

எகிப்து நாட்டின் அலெக்சாண்டிரியா நகரில் இரண்டு இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளும், அவர்களது எகிப்திய சுற்றுலா வழிகாட்டியும் சுட்டுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அந்த நகரத்தில் இருந்த இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது ஒரு போலீஸ் அதிகாரி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படுகிறது. அந்த அதிகாரி தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக அடையாளம் தெரியாத பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி எக்ஸ்ட்ரா நியூஸ் தொலைக்காட்சி சேனல் தெரிவித்துள்ளது. பல தசாப்தங்களில் எகிப்தில் இஸ்ரேலியர்கள் மீதான இத்தகைய தாக்குதல் இதுவே முதல் முறையாகும்.

காசாவில் இருந்து நடந்த தக்குதலுக்கு பிறகு, பாலஸ்தீனிய ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் இஸ்ரேலுக்குள் ஊடுருவி, இஸ்ரேலிய சமூகங்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன அறிக்கையின்படி, நூற்றுக்கணக்கான பாலஸ்தீனிய ஆயுதக்குழுவைச் சேர்ந்தர்கள் தற்போது கொல்லப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது. இதுவரை எட்டு இடங்களில் தீவிரவாதிகளுடன் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

### மொசாட் விளக்கம்

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்பட அந்நாட்டின் முக்கிய பகுதிகள் மீது ஹமாஸ் அமைப்பு ராக்கெட்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தியுள்ளது இஸ்ரேல் - பாலத்தீனம் இடையே நூறாண்டுகளுக்கும் மேலாக பிரச்னை நீடித்து வருகிறது. இதனால், அங்கே குண்டு வெடிப்புகளும், துப்பாக்கிச் சூடுகளும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. எனினும், 2021-ம் ஆண்டு இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான 11 நாள் போருக்குப் பிறகு ஒப்பீட்டளவில் பெரிய அளவில் அங்கே மோதல்கள் நடக்கவில்லை. அதற்கு ஹமாஸ் அமைப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்பட அந்நாட்டின் முக்கிய பகுதிகள் மீது ஹமாஸ் அமைப்பு ராக்கெட்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தியுள்ளது. இருபதே நிமிடங்களில் 5 ஆயிரம் ராக்கெட்டுகளை வீசி ஹமாஸ் தாக்குதல் நடத்தியதில் இஸ்ரேலின் பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிகின்றன. இதில், 40 பேர் கொல்லப்பட்டதாகவும், 740 பேர் காயமடைந்திருப்பதாகவும் இஸ்ரேல் உறுதிப்படுத்தியுள்ளது.

### 20 நிமிடத்தில் 5000 ராக்கெட் வீச்சு

இஸ்ரேல், லெபனான் மற்றும் சிரியா ஆகிய மூன்று நாடுகளும் சந்திக்கும் இடத்திற்கு அருகில் உள்ள மவுண்ட் டோவ் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். லெபனான் ஹிஸ்புல்லா இயக்கம் இந்தப் பிரச்னையில் தலையிட வேண்டாம் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

ஹிஸ்புல்லா ஒரு ஷியா இஸ்லாமிய அரசியல், இராணுவ மற்றும் சமூக அமைப்பு. இது லெபனானில் கணிசமான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. ஹமாஸை போலவே, இது இஸ்ரேலின் பரம எதிரியான இரானால் ஆதரிக்கப்படுகிறது. 2006இல் இஸ்ரேலுடன் ஒரு மாத காலப் போரை நடத்தியது. ஜீலை மாதம், லெபனானில் இருந்து ஒரு சிறு ஏவுகணை ஏவப்பட்டதை அடுத்து, இஸ்ரேலின் இராணுவம் பீரங்கித் தாக்குதலால் பதிலளித்தது.

### பாலஸ்தீன தாக்குதலுக்கு ஈரான் ஆதரவு

இரானின் தலைவர் அலி கமேனியின் ஆலோசகர், இஸ்ரேல் மீதான பாலத்தீனியர்களின் தாக்குதலை ஆதரிப்பதாக எங்களுக்குச் செய்திகள் வந்துள்ளன. பாலத்தீன போராளிகளை நாங்கள் வாழ்த்துகிறோம்' என்று ரஹீம் சஃபாவி கூறியுள்ளதாக ISNA செய்தி நிறுவனம் கூறுகிறது. பாலத்தீனம் மற்றும் ஜெருசலேம் விடுதலை அடையும் வரை நாங்கள் பாலத்தீன போராளிகளுக்கு துணை நிற்போம்' என்று அவர் கூறினார்.

### ஹமாஸ் தாக்குதலுக்கு ஹிஸ்புல்லா ஆதரவு

லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லா, காஸாவின் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், 'பாலத்தீன ஆயுதக் குழுவினரின் தலைமையுடன் நேரடி தொடர்பில் இருப்பதாகவும்' கூறியுள்ளது. அது ஹமாஸ் தாக்குதல்களை 'இஸ்ரேலின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக்கு தீர்க்கமான பதில் மற்றும் இஸ்ரேலுடன் இயல்புநிலைக்கு வர விரும்புவோருக்கான ஒரு செய்தி' என்று குறிப்பிட்டுள்ளது. இந்த ஆயுதக் குழு இஸ்ரேலின் முக்கிய எதிர்ப்பாளராகத் திகழ்ந்து வருவதாகவும், 2006 இல் அந்நாட்டுடன் போருக்குச் சென்றது என்றும் ஹிஸ்புல்லா அமைப்பு கூறி யுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பு ஈரானின் இராணுவ மற்றும் நிதி உதவியை நம்பிச் செயல்பட்டு வருகிறது.

இதேவேளை அஷ்கெலான் நகர மக்களுக்கு விதித்த கெடு நிறைவடைந்ததுமே, ஹமாஸ் மீண்டும் தாக்குதலை தொடங்கிவிட்டது. காசா பகுதியில் இருந்து ஹமாஸ் அமைப்பினர் ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

30 விநாடிகளுக்குள் 2 சுற்றுகள் ராக்கெட்டுகளை வீசி அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆனாலும், இதனால் பெரிய அளவில் சேதம் ஏதும் இல்லை என்றும் கூறப்படுகிறது. மக்கள் ஏற்கனவே பாதுகாப்பான மறைவிடங்களுக்குச் சென்று விட்டதால் பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்று தெரிகிறது. கண்ணாடி சிதைவுகள் பட்டதால் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்செய்திக் கட்டுரையானது 11 ஒக்டோபர் 2023 வரையப்பட்டது. நன்றி பிபிசி



வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# யாரைத் திருப்திப்படுத்த சீறிப் பாய்ந்தார் ரணில்?

- சி.சிவகுமாரன் -

எந்த ஒரு நெருக்கடியான சூழ்நிலையையும் சாமர்த்தியமாகவும் பக்குவமாகவும் கையாளும் இராஜதந்திரி என்ற பெருமை கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜேர்மனியின் புகழ் பெற்ற Deutsche Welle (DW) என்ற அரச ஊடக நிறுவனத்தின் தொலைகாட்சி அலைவரிசை நேர்காணலில் வழமைக்கு மாறாக சீறிப் பாய்ந்துள்ளார். இது அவரை அறிந்த இராஜதந்திரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ள அதே வேளை அச்சத்தையும் உருவாக்கியுள்ளது எனலாம்.

குறித்த ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விகளை இனி இலங்கை ஊடகவியலாளர்களும் ரணிலிடம் கேட்கத் தயங்குவர் என்று தான் கூறவேண்டியுள்ளது.

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள், சர்வதேச நாணய நிதிய கடன் விவகாரம், சனல் —4 வெளியிட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான காணொளி, உள்நாட்டு யுத்தத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய சர்வதேச விசாரணை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை பற்றிய அறிக்கை ஆகியன பற்றி ஜேர்மனிய ஊடகவியலாளர் கேள்விகள் எழுப்பிய போது மிகவும் கோபமாகவே ஜனாதிபதி ரணில் பதில் வழங்கியிருந்தார். ஒரு கட்டத்தில் ஊடவியலாளரை அவர் கேள்வி கேட்க விடவில்லை.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலோ போர்க் குற்றங்களோ எதுவென்றாலும் சர்வதேச விசாரணைக்கு செல்ல மாட்டோம் என உறுதியாக கூறியிருந்தார் ரணில். நாம் எங்களையே விசாரித்துக்கொள்கிறோம் என்பதாகத்தான் அவரது பதில்கள் அமைந்திருந்தன.

இலங்கையில் போர் முடிவுற்றப் பிறகு அதிகார நாற்காலியில் அமர்ந்த எவரும் பேசும் வழமையான கதைகளே இவை. ஆனால், இலங்கையில் இருந்த போது குறித்த விவகாரங்கள் குறித்து அமைதி காத்த ரணில் வெளிநாட்டு ஊடகத்திடம் சீறிப்பாய்ந்தமை இலங்கை சிங்கள பௌத்த மக்களின் பார்வையை தன் பக்கம் திரும்ப வைக்கத்தான் என்பதை இலகுவாக புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் யுத்தம் முடிவுற்ற பிறகு ஜனாதிபதிகளாக விளங்கிய மஹிந்த மைத்திரி, கோட்டாபய ஆகியோர் சர்வதேச ஊடகங்களை தவிர்த்தே வந்தனர்.

உள்நாட்டில் யுத்த நாயகர்களாக போற்றப்பட்ட மஹிந்த மற்றும் கோட்டாபய இருவருமே சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து கூற அல்லது முகங்கொடுக்க தயங்கி நின்றனர். ஆனால், இப்போது ஜனாதிபதி ரணில் குறித்த ஊடகத்திடம் நடந்து கொண்ட விதத்தை முதலில் ஆச்சரியக் கண் கொண்டு பார்த்தவர்கள் பிறகு இதுவும் அவரது வழமையான ராஜதந்திரமே என மனதுக்குள் வெதும்பி நிற்கின்றனர்.

ஏனென்றால் இந்த நேர்காணலில் ரணில், சர்வதேசத்துக்கு என்ன சொல்ல முயற்சித்தார் என்பதை விட இலங்கை வாழ் சிங்கள மக்களுக்கு முக்கியமான தகவலை சொல்லி முடித்து விட்டார் என்று தான் கூற வேண்டும். சர்வதேச விசாரணை அவசியமில்லை, மேற்குலக நாடுகளின் சதி, எமது நாட்டு இறைமையில் வேறு நாடுகள் தலையிடக் கூடாது என்ற பழைய பல்லவிகளை கடந்த காலங்களில் மஹிந்த தரப்பினர் உள்ளூரில் வைத்தே கூறி வந்தனர். அவை தென்னிலங்கை பேரினவாத ஊடகங்களுக்கு மாத்திரமே பெருந்தீனியாக இருந்தன. ஆனால், முதன் முறையாக வெளிநாடு ஒன்றில் வைத்து வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு ரணில் 'இலங்கையை இரண்டாம் தர நாடு என்று நினைக்கின்றீர்களா'? என நேர் கண்டவரிடமே கேட்டு விட்டார். ஆகையால், இனி ரணில் எந்த நாட்டுக்குச் சென்றாலும் குறித்த நாடுகளின் ஊடகங்களும் ரணிலிடம் மிகக் கவனமாகவே கேள்வி



களை எழுப்பும் .

நல்லாட்சி காலத்தில் ரணில் பிரதமராக இருந்த போதும் மிக அண்மையில் இலங்கையில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் குறித்த ஊடகர் தகவல்களை தம் வசம் கொண்டிருக்கவில்லையென்றே தெரிகின்றது. அப்படியிருந்திருந்தால் அவர் மத்திய வங்கி மோசடி லசந்த கொலை சம்பவம், முல்லைத்தீவு நீதிவான் விவகாரம், நீதிமன்ற தடையுத்தரவை மீறிய பௌத்த விகாரைகள் கட்டுமானம் என பல கேள்விகளை எழுப்பியிருக்கலாம். இந்த கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணிலின் மனதில் என்ன உள்ளது என்பதை சர்வதேசம் மாத்திரமின்றி இலங்கை மக்களும் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கும்.

சர்வதேசத்துக்கு ஒரு கதை இலங்கை தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒரு கதை என்ற பேச்சுக்கே இனி அங்கு இடமில்லை என்று தான் தெரிகின்றது. பொதுத்தேர்தலோ ஜனாதிபதித் தேர்தலோ எது முதலில் வந்தாலும் பேரம் பேச ஜனாதிபதியிடம் செல்லும் தமிழ்த் தரப்புகள் என்ன விடயத்தை முன்னிறுத்தி அவரிடம் கதைக்கப் போகின்றனர் என்பது குறித்து இனி தான் சூடான விவாதங்கள் வெளிக் கிளம்பப் போகின்றன. தமிழ் அரசியல் கட்சிகள் தன்னிடம் சர்வதேச விசாரணை உட்பட அது தொடர்பான வேறு எந்த கோரிக்கைகளையும் மனதில் வைத்துக்கொண்டு கதைக்க வருவதற்கு ரணில் தனது பாணியில் கடிவாளம் போட்டு விட்டார் என்றும் கூறலாம்.

ஜேர்மன் ஊடகத்திடம் ஜனாதிபதி கூறிய விடயங்கள் சர்வதேசத்துக்கு மட்டுமான செய்தி மட்டுமல்ல…அது இலங்கையில் உள்ள சகல தமிழ்க்கட்சிகளுக்குமான செய்தியாகவுமே உள்ளது. இதன் பிறகும் இங்குள்ள தமிழ்த்தரப்புகள் இனப் பிரச்சினை விவகாரத்தை மாத்திரம் முன் வைத்து தேர்தல் கால பேரம் பேசல்களை முன்னெடுக்குமாயின் அதை விட அரசியல் அறிவீனம் இருக்க முடியாது.

# ராகுல்காந்தி ஒரு "இராவணன்" பா.ஜ.கவின் பதாதை









இந்தியாவில் காங்கிரஸ் கட்சி எம்.பி., ராகுல் காந்தியை பல தலைகள் கொண்ட இராவணனாக சித்தரித்து பாஜக கட்சி பதாதைக்கு வெளியிட்டுள்ளது. இதற்கு காங்கிரஸின் ஊடகப்பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி அதன் எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி குறித்து மிகப்பெரிய பொய்யர் என்றும், ஜீம்லா பாய் விரைவில் தேர்தல் பேரணியில் அடித்துச் செல்லப்பட இருக்கிறார் என்றும் பதாதை வெளியிட்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அடுத்த நாளே, பாஜக தனது எக்ஸ் தளத்தில் ராகுல் காந்தியை இராவணனாக சித்தரித்து இந்த பதாதையை வெளியிட்டுள்ளது.

பாஜகவின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் தளத்தில், 'பாஜகவின் அதிகாரபூர்வ சமூக வலைதளத்தில், ராகுல் காந்தியை இராவணனாக சித்தரித்து வெளியிடப்பட்டிருக்கும் கிராஃபிக்ஸ் பதாதையின் உண்மையான நோக்கம் என்ன?. இந்தியாவைப் பிரிக்க நினைக்கும் சக்தியால் தனது தந்தை மற்றும் பாட்டியை இழந்த காங்கிரஸ் முன்னாள் தலைவரும், வயநாடு எம்.பி.,யுமான ராகுல் காந்திக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் மோடி பொய் சொல்லும் நோயால், நார்சிஸ்டிக் பர்சனாலிட்டி டிஸார்டரால் பாதிக்கப்பட்டிருப்பதற்கு தினமும் தரும் ஆதாரங்களில் இதுவும் ஒன்று. ஆனால் அவரது கட்சி, இவ்வாறான அருவருக்கத்தக்க ஒன்றை உருவாக்குவது ஏற்றுக் கொள்ள முடியாதது மட்டும் இல்லை. முற்றும் ஆபத்தானதும் கூட. இதற்கு நாங்கள் பயப்படமாட்டோம்' என்று தெரிவித்துள்ளார்.

பாஜக வெளியிட்டுள்ள பதாதையில், இந்தியா ஆபத்தில் உள்ளது. இது காங்கிரஸ் கட்சியின் தயாரிப்பு ஜார்ஜ் சோரோஸ் இயக்கும் ராவண் என ராகுல் காந்தியை பல தலைகளுடன் சித்தரித்துள்ளது. அதில், 'நவீன யுகத்தின் ராவணன் இங்கே. இவன் ஒரு தீயசக்தி, தர்மத்துக்கு எதிரானவன், இவனது நோக்கம் இந்தியாவை அழிப்பது தான்' என்றும் தெரிவித்துள்ளது.

பாஜகவின் இந்த பதாதை குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரியங்கா காந்தி வத்ரா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மரியாதைக்குரிய மோடி, ஜெ.பி. நட்டா அரசியல் மற்றும் விவாதங்களை நீங்கள் எந்த அளவுக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறீர்கள்? வன்முறை மற்றும் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையிலான பதாதைகள் உங்கள் கட்சியின் அதிகாரபூர்வ டுவிட்டர் தளத்தில் வருவதை ஏற்றுக் கொள்கிறீர்களா? நேர்மையாக நீங்கள் சத்தியம் செய்து வெகுநேரம் ஆகவில்லை. உங்கள் வாக்குறுதியைப் போல சத்தியத்தையும் மறந்து விட்டீர்களா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெய்ராம் ரமேஷ், பிரியங்கா காந்தியைத் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி வேணுகோபாலும் பாஜகவின் பதாதைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். 'ராகுல் காந்தியை இராவணனாக சித்தரித்து பாஜகவின் அதிகாரபூர்வத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அருவருக்கத் தக்க பதாதையைக் கண்டிக்க வார்த்தைகள் இல்லை. அவர்களது நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. அவர் கொல்லப்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள். அவர் ஏற்கனவே வன்முறையில் தனது பாட்டி மற்றும் தந்தையை இழந்துள்ளார். அரசியல் காரணங்களுக்காக ராகுல்காந்திக்கு வழங்கப்பட்டிருந்த எஸ்பிஜி பாதுகாப்புத் திரும்பப் பெறப்பட்டது. பாதுகாப்பான எம்பிகளுக்கான இல்லத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்பு அவர் வேண்டுகோள் விடுத்தும் இன்னும் அவருக்கு வேறு வீடு ஒதுக்கப்படவில்லை. இவையெல்லாம் தங்களின் வெறுப்பு நிறைந்த சித்தாந்தத்தின் மையத்தை தாக்கும் அவர்களுடைய முக்கியமான எதிரியை இல்லாமல் செய்ய நினைக்கும் பாஜகவின் சதியே' என்று தெரிவித்துள்ளார்.


# கனடா - இந்தியா இராஜதந்திர முறுகலும்...

(19ம் பக்கத் தொடர்ச்சி) நூலில் தெரிவித்துள்ளார். ,ந்தியாவின் வங்களாதே் மீதான 1971 ஆம் ஆண்டுத் போரை அடுத்து அங்கு நிகழ்ந்த மாற்றங்களுக்கு பின்னால் இந்தியப் புலனாய்வுத்துறை அதிக பங்கு வகித்துள்ளது. இதனையே இலங்கைத் தீவிலும் நிகழ்த்தியுள்ளதாக விமர்சனங்கள் உண்டு. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் அதன் பின்னரும் இந்தியப் புலனாய்வுத் துறையின் பங்கு இலங்கைத்தீவில் நிலவுவதாக விமர்சனங்கள் உண்டு. அது மட்டுமன்றி இலங்கைத் தீவின் அரசியலில் இந்தியாவின் அனைத்து செல்வாக்கும் உள்ளதென்பது தெளிவான விடயமாகும். தற்போது இந்திய சீனப் போட்டி மட்டுமல்லாது அமெரிக்கப் போட்டியும் நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே இந்திய - கனேடிய முரண்பாட்டை இலங்கை ஆட்சியாளர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்த முனைகின்றனர். அதனால் கனடாவின் ஈழத்தமிழருக்கான ஆதரவை எதிர்ப்பதோடு இந்தியாவுடன் இணைந்து கொள்வதன் மூலம் எதிர்ப்புக்கான பலத்தை அதிகரிக்க திட்டமிடுகிறது. இலங்கையின் நீண்ட வெளியுறவின் உள்ளார்ந்த இருப்பும் செயல்பாடும் ஈழத்தமிழருக்கு எதிரானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவுடன் இணைந்து கனடா முன் வைத்த இனப்படுகொலை குற்றச்சாட்டை எதிர்கொள்ள முனைகிறதாகவே விளங்கிக் கொள்ள வேண்டும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. தகப்பனாருடன் வீண் தகராறு ஏற்படலாம் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற் கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழி செய்யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வது நல்லது





மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். உத்யோகத்தில் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். கணவன், மனைவிக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.





சிம்மராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். குற்றச்சாட்டுகளு க்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும் பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம்.





துலாம்ராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புதுமையை செய்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும்.







தனுசுராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.




மகரராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்




கும்பராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்னைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பண வரத்து திருப்தி தரும். உத்யோகத்தில் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மத்திய கிழக்கின் போர் வலு மாற்றம் மொசாட்டைமாற்றி ஹமாஸ் அதிரடி!

(14ம் பக்கத் தொடர்ச்சி) ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை கொண்ட மேம்பட்ட இராணுவ தொழில்நுட்பங்களை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. கடற்படையை பொறுத்தமட்டில் ஏவுகணை தாங்கும் கப்பல், நீர்மூழ்கி கப்பல் உள்ளிட்டவற்றை இஸ்ரேல் வைத்துள்ளது. ஆனால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படைப்பலம் என்பது ஒருங்கிணைந்ததாக இல்லை.காசாவில் ஹமாஸ் படையும், மேற்கு கரைப்பகுதியில் பாலஸ்தீனத்தின் படையும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதில் சில துணை ராணுவப் படைகள் இருந்தாலும் பயிற்சி, தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் பார்த்தால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படை பின்தங்கி உள்ளது. இதுதவிர இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுடன் நல்ல உறவை வைத்துள்ளது. அமெரிக்காவும் கூட தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக தான் உள்ளது. பாலஸ்தீனம் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு மேலைநாடுகளின் ஆதரவு இல்லை. குறிப்பிட்ட சில முஸ்லிம் நாடுகள் மட்டுமே பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக உள்ளன. மேற்கூறிய இந்த விஷயங்களின் அடிப்படையில் பார்த்தால் பாலஸ்தீனத்தை ஒப்பிடும்போது இராணுவ பிரிவில் இஸ்ரேலின் கை ஓங்கி உள்ளது.

ஆயினும் இஸ்ரேலின் முக்கிய உளவு அமைப்பை மீறி அவர்கள் தாக்குதல் நடத்தி இருப்பதோடு, இஸ்ரேலின் முக்கிய படை தளபதியான 'நிர்மோத் அலோனியை ஹமாஸ் தீவிரவாதிகள் போரக்கைதியாக பிடித்து வைத்துள்ளனர். இவர் தான் காசாவின் கட்டுப்பாட்டு படைப்பகுதித் தலைவராகவும் சில காலம் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இது இஸ்ரேலுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

### மொசாட்டை ஏமாற்றி தாக்குதல் நடத்திய ஹமாஸ்

ஹமாஸ், இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலஸ்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987-ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது. ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது.

ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது இராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வதுஹமாஸ் அரசியல் நடவடிக்கைகள்: 2005-ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது.

2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. அதிபர் முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது. அதன் பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா பகுதியில் ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களைத் நிறுத்தவதற்காகவும் இஸ்ரேல்பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### இரண்டாவது பாலஸ்தீன எழச்சி

இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியின் தொடக்க ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்களை பாலஸ்தீனர்கள் பரவலாக ஆதரித்தனர். அவற்றை தியாக நடவடிக்கைகள் என்று அவர்கள் கருதினார்கள். மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பழி வாங்கப்படுவதாக எண்ணினார்கள். 2004-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அகமது யாசின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அப்துல் அஜீஸ் அல்-ரேன்டிஸ்ஸி ஆகியோரை ஏவுகணைகள் மூலம் கொன்றது இஸ்ரேல். அதே ஆண்டில் ஃபதா இயக்கத்தின் தலைவர் யாசர்அராஃபத் மரணமடைந்தார். அதன்பின் பாலஸ்தீன நிர்வாகத்துக்கு முகமது அப்பாஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். ஹமாஸின் ராக்கெட் தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதக்கூடியவர் அவர்.

### நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் வெற்றி

2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. ஃபதா இயக்கத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் அதிகார மோதல் தொடங்கியது. தேர்தலில் வெற்றி பெற்றிருந்த ஹமாஸ் இயக்கம்,அதற்கு முன் பாலஸ்தீன நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்டிருந்த அனைத்து உடன்பாடுகளையும் எதிர்த்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிப்பது உள்ளிட்டவையும் அவற்றில் அடங்கும். இஸ்ரேல் என்றொரு நாட்டை அங்கீரிப்பதாயில்லை. ஆனால் காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாலஸ்தீன நாட்டை உருவாக்குவதை ஒப்புக் கொண்டது. ஹமாஸின் சண்டை, யூதர்களுக்கு எதிரானதல்ல, ஸியோனிச ஆக்கிரிப்பாளர்களுக்கு" எதிரானது என்கிறது ஹமாஸின் புதிய ஆவணம். ஆனால் இஸ்ரேல் இதை ஏற்கவில்லை. உலகை ஏமாற்றும் முயற்சி என்று விமர்சித்தது.

# சீனா வசமாகும் இந்தோ பசுபிக் தீவுகள்

(18ம் பக்கத் தொடர்ச்சி) அணுகுமுறைகள், அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது.

சீனா பொருளாதார பலத்தைக் கொண்டு சிறிய நாடுகளை தன் பக்கம் இழுக்கிறது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கானது அல்ல. தாங்கள் எந்த அணியையும் சேரவில்லை என்று இலங்கை அரசாங்கம் கூறினாலும், அண்மையில் ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் வெளியிட்ட கருத்துக்கள் இலங்கை அவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கிறதா என்ற கேள்வியையே எழுப்பியது. இவ்வாறான நிலையில், சீனாவின் ஆதிக்க விரிவாக்க முயற்சிகளின் விளைவுகளில் இருந்தும் இலங்கை தப்பிக்க முடியாது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
HOMELIFE
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


காப்புறுதி ஒன்றே!
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Super Visa Insurance
RESP, RRSP and TFSA
Arun
KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


இரா. சம்பந்தனின்
விழியும் துளியும்
சிறுகதைத் தொகுதி வெளியீடு
விழியும் துளியும்
இரா. சம்பந்தன்
சனிக்கிழமை
ஒக்ரோபர் 14, 2023
மாலை 5 மணி
கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய மண்டபம்
635 Middlefield Rd, Scarborough
தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஈழநாடு பதிப்பகம்


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.